# தமிழர் கடைகள்மீது ஹட்டனில் மூவர் செய்த அட்டகாசம்


Registered as a News paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு சந்தா

தினப் பதிபபு

மூன்று மாதம் — ரூ. 18-00

ஆறு மாதம் — ரூ. 34-00

ஒரு வருடம் — ரூ. 66-00

# ஈழநாடு

EELANADU

National Tamil Daily

தபால்பெட்டி எண்: 49

போன்: 389

மலர் 11

இதழ்: 97

தேசிய தினசரி

ஈழநாடு சந்தா

வாரப்பதிப்பு மாத்திரம்

மூன்று மாதம் — ரூ. 4-00

ஆறு மாதம் — ரூ. 7-50

ஒரு வருடம் — ரூ. 14-00

முற்பணம் கட்ட வேண்டும்

தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம் வைகாசி 6 ரபி;அவ் 2 திங்கட்கிழமை [19-5-69]


## கண்டியிலிருந்து பொலிஸ் விரைந்தது

கொழும்பு, ஞாயிறு

ஹட்டனிலுள்ள இந்தியத் தமிழரின் கடைகளைப் பூட்டும்படி கூறி, கடைகளில் இருந்த தளபாடங்களையும் சேதப்படுத்திச் சென்ற மூவரைக் கைதுசெய்வதற்காகக் கண்டியிலிருந்து ஹட்டனுக்குப் பொலிஸார் விரைந்துள்ளனர். வில்லியம், தர்மதாஸ, கருணதாஸ என்ற மூவரும் இன்று மாலை ஹட்டன் வீதிவழியே சென்று பலத்த அட்டகாசம் செய்து சிலரைத் தாக்கினராம். ஹட்டனில் உள்ள இலங்கைத் தொழிலாளர் கழகக் காரியாலயத்தின் உள்ளும் அவர்கள் நுழைந்து சேதப்படுத்தியதாகவும் தெரிகின்றது.

கலவரம் மோசமான நிலையை அடையுமுன்னர் பொலிஸார் தக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு நிலைமையைச் சமாளித்தனர். இதுசம்பந்தமாக தர்மதாஸ என்பவர் கைதுசெய்யப்பட்டார். மற்றும் இருவர் தலைமறைவாகிவிட்டனர்.

இச்சம்பவம் சம்பந்தமாக உடனடி நடவடிக்கை எடுக்கும்படி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் திரு. தொண்டமான் பொலிஸ் அதிபருடன் தொடர்புகொண்டு கேட்டுக்கொண்டார். இச்சம்பவம் வகுப்புக் கலவரத்துக்கு வழிவகுக்குமெனவும், இது பற்றிப் பாரபட்சமற்ற விசாரணை நடத்தவேண்டுமெனவும் தமிழரசுக்கட்சி எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

## தமிழ்நாடு உணவு அமைச்சர் கோவிந்தசாமி காலமானார்

சென்னை, மே 18

தமிழ்நாடு உணவு விவசாய அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி இன்று பிற்பகல் 3-30க்கு சென்னை அரசாங்க மருத்துவ மனையில் காலமாகி விட்டார். கடந்த 3-ம் திகதி சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்ட இவரின் உடல் நிலை அடிக்கடி கவலைக்கிடமாகயிருந்து வந்தது. இன்று காலை இரத்த வாந்தி அதிகமாக எடுத்ததைத் தொடர்ந்து அவர் காலமானார்.

1952, 1957, 1967-ம் ஆண்டுகளில் ராஜ்ய கீழ் சட்டசபை தி. மு க. உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் காலஞ் சென்ற முதலமைச்சர் திரு. சி. என். அண்ணுதுரையின் மந்திரி சபையில் அமைச்சராகப் பதவி வகித்தார். திரு. மு. கருணுநிதி தலைமையில் அமைக்கப்பட்ட மந்திரி சபையில் உணவு விவசாய அமைச்சராக மீண்டும் கடமையாற்றி வந்தார். இவருக்கு 3 ஆண்பிள்ளைகளும், 2 பெண்பிள்ளைகளும் உள்ளனர். திரு. கோவிந்தசாமி காலமானபோது அவரது மனைவியும் மக்கள் சிலரும் முதலமைச்சர் கருணுநிதியும், மற்றும் சில அமைச்சர்களும் அவர் அருகில் இருந்தனர்.

ஒரு பரீஸ்டரான இவர் 1918ம் ஆண்டு ஜூன் மாதம் பிறந்தார்

அமைச்சர் கோவிந்தசாமியின் மறைவையொட்டி நாளை ராஜ்ய அரசாங்க அலுவலகங்கள் எல்லாம் மூடப்பட்டிருக்கும். நாளைய தினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு தமிழ்நாடு அரசாங்கம் அறிவித்துள்ளது.

சென்னை அரசாங்க மருத்துவ மனையில் காலமான திரு.கோவிந்தசாமியின் சடலம் இன்று மாலை அடையாற்றிலுள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. நாளைக் காலை 10 மணிக்கு இறுதிச் சடங்கு நடைபெறும்.

### இந்திரா, ராஜாஜி அனுதாபம்

அமைச்சர் கோவிந்தசாமியின் மறைவு ஆழ்ந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. அவர் ஒரு கடுமையான உழைப்பாளி. திரு. கருணுநிதிக்கு இது ஒரு பேரிழப்பு என்று அவர்கள் தங்கள் அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளனர். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. சி. சுப்பிரமணியம், தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. எம். கல்யாணசுந்தரம் ஆகியோரும் அனுதாபச் செய்தி அனுப்பி வைத்துள்ளனர்

## ‘வடபகுதி சிங்கள பௌத்த பாடசாலைகளை

# பொறுப்பேற்கும் முயற்சியை உடனே நிறுத்துங்கள்’

## யாழ். பெற்றோர் சங்கம் பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

**வடபகுதியிலுள்ள மூன்று சிங்கள பௌத்த பாடசாலைகளை அரசாங்கம், பொறுப்பேற்பதை ஆட்சேபித்து, யாழ்ப்பாணம் பெற்றோர் சங்கத்தின் சார்பில், 11 பிரமுகர்கள், பிரதமர் டட்லி சேனநாயக்காவிற்கு ஒரு மகஜரை நேற்று அனுப்பியுள்ளார்கள். அந்த மகஜரில் சிங்கள பௌத்த பாடசாலைகளை பொறுப்பேற்கும் கல்வி மந்திரியின் முயற்சிக்கு உடனடியாக முற்றுப் புள்ளி வைக்கும்படி பிரதமரைக் கேட்டுள்ளனர்.**

அந்த மகஜரில் கீழ்க்காணும் பிரமுகர்கள் கையெழுத்திட்டுள்ளனர். திரு. கே. நேசையா (தலைவர், பெற்றோர் சங்கம்) திரு. ஏ. வி. குலசிங்கம் (அட்வகேட்), டாக்டர் பசுபதி, திரு. எம். கனகசபை (முன்னாள் புகையிரத பகுதி அதிபர்) திரு. எஸ். தம்பித்துரை (முன்னாள் நீதிபதி) திரு. எஸ். தனபாலசிங்கம் (முன்னாள் நீதிபதி) திரு. எல். எஸ். குலதுங்கம் (உதயதாரகை ஆசிரியர்) டாக்டர் கே. கனகரத்தினம், திரு. எஸ். சூரசங்காரம் (அட்வக்கேட்) திரு. எஸ். பொன்னையா அட்வகேட், செயலாளர் பெற்றோர் சங்கம், செயலாளர் ஆலயப்பிரவேசக்குழு) திரு. ஜே. ஹன்டி (தலைவர். யாழ். கிறிஸ்தவ ஐக்கிய சங்கம்).

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: வடக்கிலுள்ள 3 சிங்கள பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டுமென்ற கல்வியமைச்சரின் தீர்மானம் எத்தகைய கஷ்ட நிலையை விளைவித்துள்ளதென்பதையறிய உங்கள் கவனத்தை இவ் விடயத்தில் திருப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒருபாடசாலையின் சகல மாணவர்களையும் ஒரு குறிப்பிட்ட சமயத்துக்கோ அல்லது ஒரு குறிப்பிட்ட அரசியல் தத்துவத்தின் கீழ் [illegible] கொண்டுவருவதோ தற்காலம் பொறுக்க முடியாத தொன்றாகும். இது போன்ற ஒருபாடசாலை மாணவர்களின் தாய்மொழி வே[illegible] அ[illegible]களை ஒருமொழியின் கீழ் கல்வி கற்பித்தலும் [illegible] பாடசாலைகளை நிறுவுதல் என்ற தீர்மானம் அவர்களைமேலும் பின்தங்கிய நிலைக்குக் கொண்டு செல்வதற்கும் அதன் காரணமாக சமூகக் குறைபாடுகள் ஏற்படுவதற்கும் காரணமாகும். இதற்கு மாறாக ஒருபகுதியில் உள்ள எல்லாப்பிள்ளைகளுக்கும் ஒரு பொதுப்பாடசாலையில் கல்வி கற்பித்தால் சமூக ஒருமைப்பாடு நிலவும். இத்தகைய ஒருசமூக ஒருமைப்பாட்டை எங்கள் நகரத்திலுள்ள பாடசாலைகள் பலவற்றில் காணலாம்.

இவ்வாறு சிறுபான்மை சமூகத்தவருக்கெனத் தனிப்பட்ட பாடசாலைகளில் படிக்கும் அம்மாணவர்களுக்கு பெரும்பான்மை சமூகத்தினரின் பிள்ளைகளோடு போட்டி போட்டு கற்கும் வ[illegible]ப்பிராது. எனவே இவ[illegible]ளுக்கென அமைந்த தனிக்கல்வி தரக்குறைவானதாக விருக்கும். யுனெஸ்கோவும் இத்தகைய ஒரு நடைமுறையை விலக்குகிறது.

இது சம்பந்தமாக [illegible]

## “கந்தன் கருணையால் வெற்றி” — எம் பி.

யாழ்ப்பாணம், திங்.

“கந்தன் கருணையால் ஆலயப் பிரவேச வழக்குகள் யாவும் வெற்றியாக முடிந்துள்ளன. மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக பொதுமக்கள் எதிர்பார்த்திருந்த தீர்ப்பு சாதிப்பாகுபாடு காட்டுதல் அநீதி என்பதைப் புலப்படுத்திவிட்டது இதனுல் சைவ சமயம் வளர்வதற்கு நற்காலம் பிறந்து விட்டது. ஏனைய ஆலய தர்மகர்த்தாக்களும் இனிமேலும் தொடர்ந்தும் மௌனம் சாதியாமல் தாமதமின்றி ஆலயங்களைத் திறந்துவிட்டு, சாதிப் பாகுபாட்டை நீக்கி ஒற்றுமையைப் பாதுகாக்க உதவ வேண்டும்.”

இவ்வாறு கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மாவை கந்தசாமி கோவில் அப்பீல் தீர்ப்பு பற்றி ‘ஈழநாடு’ நிருபரிடம் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேச அப்பீல் வழக்குத் தீர்ப்பு ஆலயப்பிரவேசப் பிரச்னைக்கு ஒரு முடிவுகாண வழி வகுக்க வேண்டுமென்றும், தொடர்ந்து சமயம் வளர வேண்டுமானல் இந்த புசல் [illegible]

## அப்பலோ - 10 புறப்பட்டது

கேப்கென்னடி, மே 18

அமெரிக்க விண்வெளிக் கப்பலான அப்பல்லோ-10 இன்றிரவு சரியாக 10-19 மணிக்கு (இலங்கை நேரப்படி) கேப்கென்னடியிலிருந்துசந்திரனை நோக்கிப் புறப்பட்டது. 3 வீரர்களுடன் புறப்பட்ட இந்தக் கப்[illegible]

## தி மு. க. எதிர்க்கிறது

கொழும்பு, ஞாயிறு

“தமிழ் பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்பதை இலங்கை திராவிடமுன்னேற்றக்கழகம் ஆட்சேபிக்கவில்லை. ஆனுல் தமிழ் குழந்தைகளுக்கு சிங்களத்தைப் போதனுமொழியாக்குவதை எதிர்க்கிறது” என்று இலங்கை திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர் திருஇரா.இளஞ்[illegible]

# “பௌத்த பாடசாலைகளை

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

பெற்ரோர் சங்கம்) திரு. ஏ. நீதிபதி) திரு. எஸ். தனபா வி. குலசிங்கம் (அட்வ லசிங்கம் முன்னுள் நீதி கேட்), டாக்டர் வி. ரி. பதி) திரு எல். எஸ். குல

திரு. எஸ். பொன்னையா அட்வகேட், செயலாளர் பெற்ரோர் சங்கம், செயலா

# "பௌத்த பாடசாலைகளை நான்எதிர்க்கமாட்டேன்" ஜி. ஜி

அல்லைப்பிட்டி, ஞாயிறு

'பௌத்த பாடசாலைகள் அமைப்பதை நான் எதிர்க்கப்போவதில்லை' என தமிழ்க்காங்கிரஸ் தலைவரும் யாழ்ப்பாண எம்.பி யுமான திரு.ஜி.ஜி. பொன்னம்பலம், மண்டைதீவு கிராமசபை மண்டபத்தில் நடந்த தமிழ்க்காங்கிரஸ் ஆலோசனைக்கூட்டத்தில் தெரிவித்தார். வடபகுதியில் பௌத்த பாடசாலைகள்பற்றி கேட்கப்பட்ட கேள்விஒன்றுக்கு பதிலளிக்கையிலேயே திரு ஜி.ஜி.பொன்னம்பலம் இவ்வாறு தெரிவித்தார்.

திரு.பொன்னம்பலம்பேசுகையில் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் ஏகோபித்து ஒரு கட்சியை ஆட்சிமன்றத்திற்கு அனுப்புவதன்மூலம் எமது உரிமைகளைப்பெற்றுவிடமுடியும். கடந்த காலங்களில் தமிழ்மக்கள் பிளவுபட்டிருந்த நிலையிலேதான் உரிமைகள் பறியோய்விட்டன. வடக்கு,கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் மக்கள் பெறும் உரிமை போலவே ஏனைய மாகாணங்களிலுள்ள தமிழர்களுக்கும் உரிமைகள் இருக்கவேண்டும்.

### பல்கலைக்கழகம்

தமிழ்த் தலைவர்களின் ஒற்றுமையின்மையினுலேதான் தமிழ்ப்பகுதிக்கு ஒரு பல்கலைக்கழகம் கிடைக்காது போய்விட்டது இன்னும்ஒரு வருடத்துக்கு இந்த ஆட்சி நீடிக்குமாயின் நான் யாழ்ப்பாணத்துககு ஒரு பல்கலைக்கழகத்தைக்கொண்டுவந்தே தீருவேன்.

இக் கூட்டத்தில் திரு.என் ரி.சிவஞானம், திரு.எஸ்.சங்கரப்பிள்ளை ஆகியோருட் பேசினர். காங்கிரஸ் நிர்வாகசபையொன்றும்தெரிவு செய்யப்பட்டது.

## தமிழ் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கவேண்டும்

**— சி. த. மகாசபை**

யாழ்ப்பாணம், ஞாயிறு

'யாழ்ப்பாணத்திலுள்ள 3 பௌத்த பாடசாலைகளையும் அரசாங்கம் பொறுப்பேற்கும் பட்சத்தில் தற்போது கல்விகற்பிக்கும் ஆசிரியர்களுக்கே அங்கு நியமனம் வழங்கவேண்டும்'.

இவ்வாறு பிரதமரையும் கல்வி அமைச்சரையும் கோரும் தீர்மானம் அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் பொதுச்சபைக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. இக் கூட்டம் திரு. எம். ஸி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 1968ம் வருட சஞ்சிகையில் உள்ள 'ஆலயப் பிரவேசம்' சம்பந்தமானகட்டுரையில் சாதிவித்தியாசம் பாராட்டப்படவேண்டும் என்ற கருத்துக்கள் இருப்பதால், அரசாங்க பாடசாலையிலிருந்து வெளிவந்த இச் சஞ்சிகையில் இப்படியான கட்டுரை பிரசுரிக்கப்பட்டதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சரைக் கோடும் தீர்மானமும் இங்கு நிறைவேற்றப்பட்டது.

மேற்படி மகாசபையின் 27வது வருடாந்த மகாநாட்டை அடுத்தமாதம் 14-ந் திகதி ஆனைப்பந்தி உயர்கலைக் கல்லூரியில் நடாத்துவதென்றும் இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

(கா. நி)

பௌத்த பாடசாலை விவகாரம்

# பிரதமர் - தமிழரசார் நாளை சந்திப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் அடுத்தமாதம் முதல் பொறுப்பேற விருப்பது சம்பந்தமாக தமிழரசுத் தூதுக்குழுவொன்று நாளை பிரதமரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கின்றது.

நாளை காலை 11மணிக்கு இப் பேச்சுவார்த்தை நடைபெறுமெனத் தெரியவருகின்றது.

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் செல்லும் தமிழரசுத் தூதுக்குழுவில் திருவாளர்கள் எஸ். எம். இராசமாணிக்கம் எம். பி., எஸ். கதிரவேற்பிள்ளை எம். பி., அ. அமிர்தலிங்கம் எம். ஆகியோர் முக்கியமாக அங்கம் வகிப்பார்கள்.

இதைத் தொடர்ந்து இம் மாதம் 23ம் திகதி காலை இது சம்பந்தமான தமிழரசுக் கட்சியின் செயற்குழுக் கூட்டமும், பின் அன்றிரவு இதனைக் கண்டிக்கும் முகமான பகிரங்கக் கூட்டமொன்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கிறது.

(கா. நி.)

## வைத்திய அதிகாரி

சுழிபுரம், ஞாயிறு

பண்டத்தரிப்பு அரசினர் கிராம வைத்தியசாலைக்கு இதுவரை காலமும் அப்போதிக்கரி ஒருவரே பொறுப்பதிகாரியாக கடமையாற்றி வருகின்றார். சுகாதார அமைச்சு ஜூன் மாதம் தொடக்கம் ஒரு வைத்திய அதிகாரியை இவ்வைத்தியசாலைக்கு பொறுப்பதிகாரியாக நியமிக்கநடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவருகிறது.

தற்காலம் பொறுக்க முடியாத தொன்றாகும். இது போன்ற ஒருபாடசாலை மாணவர்களின் தாய்மொழி வேறுபட்டுள்ள போதும் அவர்களை ஒருமொழியின் கீழ் கல்வி கற்பித்ததும் பொறுக்கமுடியாத செயலாகும் மேற்குறிப்பிட்ட பாடசாலைகள் சம்பந்தமாக இவ்வாறு செய்யப்புகுந்தால் அது எங்கள் எதிர்ப்பை வலுப்படுத்துமேயன்றிக் குறைக்காது.

சிறுபான்மை சமூகத்தினருக்குத் தனிப்பட்ட பாடசாலை ... ராது. எனவே இவர்களுக்கென அமைந்த தனிக்கல்வி தரக்குறைவானதாக விருக்கும். யுனெஸ்கோவும் இத்தகைய ஒரு நடைமுறையை விலக்குகிறது.

இது சம்பந்தமாக கொழும்பு தினசரிகள் சில இன மத கலவரம் ஏற்படத்தக்க உணர்ச்சிகளை எழுப்பத்தக்க கருத்துகளை வெளியிடுகின்றன. அவைகள் அச்செய்திகள் பற்றி குறிப்பிடும்போது 'அரசாங்க வட்டாரங்கள்' குறிப்பிட்ட அமைச்சின் பிரமுகர் ஒருவர் தெரிவிக்கிருர் எனக் குறிப்பிடுகின்றன. ஆனுல் இவ்விடயத்தோடு கூடிய தொடர்புள்ளவர்கள் நாங்களே.

எனவே இந்த நாட்டின் பிரதமர் என்ற வகையில் இத்தகைய கல்வியமைச்சரின் தவருன இயக்கத்துக்கு நிலைமை மோசமடைவதற்கு முன்னர் ஒரு முற்றுப்புள்ளி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

... கோவில் ஆலயப் பிரவேச அப்பீல் வழக்குத் தீர்ப்பு ஆலயப்பிரவேசப் பிரச்னைக்கு ஒரு முடிவுகாண வழி வகுக்க வேண்டுமென்றும், தொடர்ந்து சமயம் வளர வேண்டுமானுல் இந்த புசல் ஒழிய வேண்டும் என்றும் அவர் மேலும்தெரிவித்தார்.

## சிங்கள ஆசிரியர்களை நியமித்தால் எதிர்ப்போம்

யாழ்ப்பாணம், திங்கள்

'வடபகுதியில் அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் 3 தமிழ் பௌத்த பாடசாலைகளில், தமிழ் ஆசிரியர்களுக்குப் பதிலாக,சிங்கள ஆசிரியர்களை நியமித்தால் அதனை நாங்கள் எதிர்ப்போம்'

புரட்சிகர சமசமாஜக்கட்சியை சேர்ந்த திரு.வி.எம். பொன்னையா நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. பொன்னையாமேலும் கூறியதாவது:- தற்பொழுது அப்பாடசாலையில் கல்வி கற்பிக்கும் தமிழ் ஆசிரியர்ளுக்கு அரசாங்கம் நியமனம் வழங்கவேண்டும். அத்துடன் தமிழ்மொழிமூலம்தான் இப் பாடசாலைகளில் கல்வி கற்பிக்கவேண்டும்.

சிறுபான்மை சமூகத்தினர் கல்வியில்பின் தங்கியுள்ளனர் என்பது உண்மைதான். ஆனுல் உதவி செய்கிறோம் என்ற போர்வையில், சிங்களத்தை திணிக்கக்கூடாது.

சிங்களத்திற்கும், தமிழ் மொழிக்கும் சம அந்தஸ்து வழங்க வேண்டுமென்பதே எமது கட்சியின் கொள்கை. சிங்களம் மட்டும்சட்டத்தை ஆட்சிமன்றத்திலும் வெளியிலும் ஏற்றுக்கொண்ட தமிழரசார். இன்று எதிர்ப்பதில் அர்த்தமில்லை.

10 இன்றிரவு சரியாக 10-19 மணிக்கு (இலங்கை நேரப்படி) கேப் கென்னடியிலிருந்துசந்திரனை நோக்கிப் புறப்பட்டது. 3 வீரர்களுடன் புறப்பட்ட இந்தக் கப்பலிலிருந்துஇரண்டு வீரர்கள் பிரிந்துசென்று மற்றைய கப்பலொன்றில் பிரயாணஞ்செய்வர். சந்திரனிலிருந்து 9 மைல் தூரத்தில் இவர்கள் வலம் வந்து தாய்க்கப்பலில் ஏறுவர்.

வருகிற 25ந் திகதி அதிகாலை 4 மணிக்கு இது பூமியில் இறங்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

(விபரம் 3ம் பக்கம்)

... குழந்தைகளுக்கு சிங்களத்தைப் போதனுமொழியாக்குவதை எதிர்க்கிறது" என்று இலங்கை திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளர்திருஇரா.இளஞ்செழியன்தெரிவித்துள்ளார்.

வடபகுதியிலுள்ள மூன்று பௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்க விருப்பது குறித்து திரு. இளஞ்செழியன் இவ்வறிக்கையை வெளியிட்டார்.

### உற்சவம்

கோப்பாய், ஞாயிறு

கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவம் இம்மாதம் 22-ம் திகதி துவஜாரோகணத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது.

ஈழநாடு 10-வது ஆண்டுவிழா

# 26 கல்லூரிகள் கலந்துகொள்ளும்

## வலைப்பந்தாட்டம் நாளை ஆரம்பம்

யாழ்ப்பாணம், திங்கள்

வருடந்தோறும் 'ஈழநாடு' வெற்றிக் கேடயத்துக்காகவும் கல்விப் பகுதியினரால் சிரேஷ்ட பிரிவு, கனிஷ்ட பிரிவு என நடாத்தப்படும் வலைப்பந்தாட்டப் போட்டி நாளை ஆரம்பமாகின்றது.

இவ் வலைப்பந்தாட்டப் போட்டி இவ் ஆண்டு 'ஈழநாடு 10-வது ஆண்டை முன்னிட்டு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இடம் பெறுகின்றது.

நாளைய போட்டிகள் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது. கீழ் பிரிவில் வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியும், பருத்தித்துறை மெதடிஷ்ட் கல்லூரியும், மேற்பிரிவில் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரியும்,பருத்தித்துறை மெதடிஸ்ட் கல்லூரியும் மோதுகின்றன.

மேற்பிரிவில் பங்குபற்றும் கல்லூரிகள்:


யாழ். இந்து மகளிர், திருநெல்வேலி முத்துத்தம்பி, கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், சாவகச்சேரி றிபேர்க், உடுப்பிட்டி மகளிர், பருத்தித்துறை மெதடிஸ்ற், சென். திரேசா, விக்டோரியா, ஸ்கந்தவரோதயா, மானிப்பாய் மகளிர், மகாஜனு, இளவாலை கொன்வன்ட், யூனியன்.

கீழ்ப் பிரிவில் பங்குபற்றும் கல்லூரிகள்;

கொக்குவில் இந்து, யாழ். இந்து மகளிர், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம், வட. இந்து மகளிர், பருத்தித்துறை மெதடிஸ்ட், மகாஜனு, இளவாலை கன்னியாஸ்திரிமடம், உரும்பராய் இந்து, சென். திரேசா, பண்டத்தரிப்புமகளிர், ஸ்கந்தா, மானிப்பாய் மகளிர், வேம்படி.

இறுதிப் போட்டிகள் 'ஈழநாடு' 10வது ஆண்டுவிழா நடைபெறும் திகதிகளையொட்டி நடைபெறும்.

(கா. நி



வண்ணை ஸ்ரீ வேங்கடேஸ்வர வரதராஜ பெருமாள் கோவில் நிதிக்காக கடந்த 15-ம் திகதி யாழ். நகரமண்டபத்தில் நடைபெற்ற செல்வி கீதாஞ்சலி சிவாஜிதுரையின் நடனநிகழ்ச்சிக்கு தலைமைவகித்த யாழ்ப்பாணம் எம் பி. திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் உரையாற்றுவதையும், பார்வையாளரில் ஒருபகுதியினரையும் இப்படத்தில் காண்க

படப்பிடிப்பு: ஏ. வி. எம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

9 கூப்பன் புத்தகங்கள் அத்தியடி சங்கக்கடையடியில் தவறிவிட்டன. எங்காவது இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உடனடியாக 'ஈழநாடு' காரியாலயத்தில் அல்லது நேரில் ஒப்படைக்கவும். உரிய சன்மானம் வழங்கப்படும். செல்லையா செந்தில்நாதன், 6, புதுறோட், அத்தியடி, யாழ்ப்பாணம். 1133

### தேவை

யாழ்ப்பாணப் பகுதியில் உள்ள தியேட்டருக்கு ஒரு புக்கிங் கிளாக், ஒரு ஒப்பறேற்றர் தேவை. பிணைப் பணம் ரூபா 1500/-. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். விளம்பர இல. 1129 C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 1129

கடைதல் இயந்திரத்தில் (Lathe) வேலை செய்யக்கூடிய ஒருவரும் பித்தளை அலுமோனியம் வார்ப்பு வேலை தெரிந்த ஒருவரும் தேவை. இரு பகுதி வேலையும் தெரிந்த ஒருவருக்கு விசேட சலுகை உண்டு. வேலழகன் தொழிற்சாலை, சுன்னுகம். 1134

கூட்டுறவுப் பயிற்சி பெற்ற மனேச்சர் சம்பளம் தராதரத்தைப் பொறுத்து ரூபா 100/- துவக்கம் ரூபா 150 - வரை. கரம்பொன் பல நோக்கக் கூட்டுறவுச் சங்கம், கரம்பொன், ஊர்காவற்றுறை. தலைவருக்கு விண்ணப்பிக்கவும். 1130

### விற்பனைக்கு

நாய்க்குட்டிகள்:

உயர்ஜாதி ஒரு மாத அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. திருமதி இ. தம்பிப்பிள்ளை, வயிரவகோவிலடி, அராலி வடக்கு, வட்டுக்கோட்டை. 1131

கார்:

சொந்தப் பாவிப்பிலுள்ள EL 9000 தொடர் இலக்கமுள்ள மொரிஸ் மைனர் கார். கைதடி, அரசாங்க வயோதிபர் இல்லத்து அதிகாரியுடன் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 804, கோப்பாய். 1132

ராஜா 126வது தினம் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர்-ஜெயலலிதா நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)

### ஊர்காவற்றுறைப் பட்டினசபை கேள்வி விளம்பரம்

1969-ம் ஆண்டு வைகாசி மாதம் 21-ந் திகதி மாலை 3 மணி வரை பட்டின சபைத் தலைவரால் கீழ்க் குறிக்கப்படும் வேலைக்குச் சீல் வைத்த கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கலிச்சசாலம்பை வீதிக்குக் கல் பரவித் தாரிடுதல்.

மற்றும் விபரங்கள் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எஸ். இம்மானுவேல்,
தலைவர்,
பட்டினசபை,
ஊர்காவற்றுறை.

பட்டினசபைக் காரியாலயம்,
ஊர்காவற்றுறை.
17-5-1969. 1577

### இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**திங்கள் 19—5—69**

செய்திகள் காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-45 துதிப்பாடல்கள், 7-30 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள், 8-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 61 மீ

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 சித்திர கானம், 1-00 படப்பாட்டு, 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ அன் 49 மீ

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-30 கல்விஒலி பரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்த தின வாழ்த்துக்கள், 5-15 மாணவர்நிகழ்ச்சி, 5-45 படத்திவிருந்து.

இரவு 6-15 வீணையும், புல்லாங்குழலிசையும், 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம், 7-03 கர்னுடகஇசை, 7-35 வாத்தியஇசை, 7-45 நாடகம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 பேச்சு, 10-00 நேயர்கேட்டவை, 10-30

# 'உலகவிளையாட்டரங்கில் இலங்கையும் இடம்வகிக்கும்'

யாழ்ப்பாணம், திங்கள்

''யாழ். உதைபந்தாட்ட வீரர்களின் தரம் பாராட்டக்கூடிய விதத்தில் உயர்ந்திருப்பதைக் காணும்போது நான் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இவர்களின் தரம் மேலும் மேலும் உயர்வதற்கு விளையாட்டமைச்சு தன்னுலான உதவிகளை அளிப்பதற்கு என்னேரமும் தயாராக இருக்கின்றது.

இவ்வாறு-யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் அழைப்பின் பேரில்யாழ். மாவட்ட உதைபந்தாட்ட வீரர்களுக்கு விளையாட்டமைச்சின் உதைபந்தாட்டப் பயிற்சியாளர் திரு. அல்பட் பெர்னண்டோவினுல் யாழ். கோட்டை மைதானத்தில் கடந்த பல நாட்களாக நடைபெற்றுவந்த உதைபந்தாட்டப் பயிற்சியின் இறுதி நாளன்று சமுகம் கொடுத்த விளையாட்டமைச்சின் பொறுப்பாளர் டாக்டர் எச். எஸ். ஆர். குணவர்த்தனு கூறினுர்.

அவர் மேலும் கூறியதாவது- விளையாட்டமைச்சு நாட்டின் சகல பாகங்களிலும் பலரக விளையாட்டுகளுக்கு ஆங்காங்கு பயிற்சியாளரை நியமித்து ஊக்குவித்து வருகின்றது, நகரங்களில் உள்ள வீரர்களுக்கு விளையாட்டில் எவ்வாறு ஊக்கம் அளிக்கப்படுகின்றதோ, அதேபோல் கிராமப்புறங்களிலுமுள்ள விளையாட்டு வீரர்களுக்கும் ஊக்கமளிக்க பல விளையாட்டுப் பயிற்சியாளரை ஆங்காங்கு தற்போது விளையாட்டமைச்சு நியமித்து வருகிறது ஆகவே விரைவில் இலங்கை உலக விளையாட்டரங்கில் தனக்கென ஒரு இடத்தை வகிக்கும் என்பதுதிண்ணம்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தலைவரும், விளையாட்டமைச்சின் உதவிப் பொறுப்பாளருமான டாக்டர் ஜெ. சி. துரைசிங்கம் இவ் வைபவத்தின் ஆரம்பத்தில் சகலரையும் வரவேற்றுப் பேசினுர்.

இவ் உதைபந்தாட்டப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட வீரர்கள் அனைவருக்கும் திருமதி குணவர்த்தனு நற்சான்றுப்பத்திரம் வழங்கினுர்.

யாழ். உதைபந்தாட்டச் சங்கத்தின் காரியதரிசி திரு. பாலசுப்பிரமணியம் அனைவருக்கும் நன்றியுரை கூறினுர். (தே. நி.)

## இன்றைய பலன்

சௌமிய வருடம்
19-5-69
திங்கட்கிழமை
வைகாசி 6-ந் திகதி

திதி- திருதியை இரவு 7-04 மேல் சதுர்த்தி.

நட்சத்திரம்- மிருகசீரிடம் பகல் 10-22 மேல் திருவாதிரை.

ராகுகாலம்- 7-23—8-53.

சுபநேரம்- 11-53—1-23.

இன்று பிறந்தவர்களுக்கு காதலர் வாழ்வில் களிப்பு மிகுதியும், பாடகர்களுக்கு மதிப்பும், கைத்தொழில் புரிவோர்க்கு கனதனமும், யந்திர வளர்ச்சியும், பொன் பொருள் விருத்தியும், புண்ணிய விருப்பும், புகழ் தரும் நல்லாண்டாகும்.

மேஷம்- இதயக்கழிப்பு இணைப்பும் இறுகும்.

ரிஷபம்- சிநேகிதர் பீடை, சிந்தனை மிகுதி.

மிதுனம்- ஏமாற்றம் தாக்கும், விழிப்புடன் இரு.

## விளையாட்டு மைதானம்

சுழிபுரம், ஞாயிறு

மாதகல் மேற்கு நாவலடியிலுள்ள நாற்பது பரப்பு நிலம் விளையாட்டுத் திடல் அமைப்பதற்கு பயன்படுத்தப்பட விருக்கின்றது. இதற்கான நடவடிக்கைகளை பண்டத்தரிப்பு கிராமசபையினர் எடுத்து வருவதுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுடன் தொடர்பு கொண்டுள்ளனர்.

## வடிவேலு 'மாஸ்டர்'

வடிவேலு மாஸ்டர் ... வேலு ... மாண[illegible]களாலும், பெரியோர்களாலும் அன்பாகவும்



## ''யாழ்ப்பாணத்திலே கூடுதலான சாரணர் படைகள் இருக்கின்றன''

**— பிரதம சாரணஆணையாளர்**

யாழ்ப்பாணம், ஞாயிறு

''பிரதேச வாரியாகப் பார்க்கும்போது யாழ்ப்பாணத்திலேயே கூடுதலான சாரணர் படைகள் இருக்கின்றன என்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதுபோன்ற விழாக்களில் நான் அதிகம் கலந்து கொள்வதில்லை. யாழ்ப்பாணத்தில் நான் கலந்து கொள்ளும்முதலாவது விழாவும் அதுவே.''

உடும்பிராய் இந்துக்கல்லூரிச் சாரணர் குழுவின் பத்தாண்டு நிறைவு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதம சாரண ஆணையாளர் திரு. வில்ஸ்றேய் எச். குணசேகரா இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். மாவட்டச் சாரண ஆணையாளர் திரு. ஜே. ஜி. அரசரத்தினம் சாரணக் கொடியை ஏற்றி வைத்தது டன் விழா ஆரம்பமானது. வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் சாரணர் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார். சாரணர் பத்தாண்டுப் பூர்த்தி அறிக்கையை குழுச் சாரண ஆசிரியர் திரு. செ ஜயாத்துரை சமர்ப்பித்தார்.

கல்லூரி அதிபர் திரு. அ. வைத்தியலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சாரணர்களின் 'ந[illegible]யார்' என்ற நிகழ்ச்சியும் ''கூட்டும் இயந்திரம்,'' 'லசீம்' விளையாட்டு, கூர் [illegible] நடிப்பு, வன[illegible], இசைக்கு இயைந்த நடனம், பரதநாட்டியப் நகைச்சுவைநடிப்பு, முதலிய நிகழ்ச்சிகளும் வழிகாட்டிகளின் பூஜா நடனம் முதலியனவும் இடம்பெற்றன. சாரண உதவி ஆசிரியர் திரு. சி. எஸ். இராசரத்தினம் நன்றி தெரிவித்துப் பேசினுர். (கா. நி.)

## கடல்நீர் வருகிறதாம்

அளவெட்டி, ஞாயிறு

காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் அசிரத்தையால் நாட்டுக்குள் கடல்நீர் வருகிறதாம். இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்கும்படி வடமாகாண அரசாங்க அதிபரை காங்கேசன்துறை மக்கள் கோருகின்றனர்.

சிமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமானதும் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு அருகாமையில் உள்ளதுமான காணியில் இருக்கும் மணலை, மணல் வியாபாரிகள் கொண்டு சென்று விடுகிறபடியால், 10 அடிககு மேல் கடல்நீர் உள்ளே வந்துள்ளது.

இது தொடர்ந்து நடைபெற்ருல் நாட்டுக்குள் கடல் வந்துவிடும் என மக்கள் அஞ்சுகின்றனர்.

இதுபற்றி உடன் நடவடிக்கை எடுக்கும்படி காங்கேசன்துறை மக்களும், காங்கேசன்துறை கிராம சேவையாளரும் கூட்டுத்தாபன அதிகாரிகளிடமும், யாழ். அரசாங்க அதிபரிடமும் முறையிட்டுள்ளனர்.

# பிரச்னைகளை தீர்ப்பதற்கு விசாரணைக்குழு வேண்டும்

அளவெட்டி, ஞாயிறு

''எமது பிரச்னைகளை தீர்க்க ஒரு விசாரணைக் குழுவை உடன் நியமிப்பதுடன், பாராளுமன்றத்தில் ஓர் இணைப்பு மசோதாவையும் கொண்டுவர வேண்டும்.''

இவ்வாறு அரசாங்கத்தையும், அரசியல் தலைவர்களையும் கோரும் தீர்மானமொன்று அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஊழியர் சங்க கூட்டத்தில் நிறைவேறியது.

அத் தீர்மான முழுவிபரமும் வருமாறு:-

அரசு தனியார் பாடசாலைகளை பொறுப்பேற்றது யாவரும் அறிந்ததே. அப்போது அரசாங்கம் பாடசாலை உடமைகளை கைப்பற்றியது. ஆசிரியர்கட்கூட மேலதிக சலுகைகள் சிலவற்றை வழங்கியது. ஆனுல் ஆசிரியர் அல்லாத ஊழியர்கள் உதாசீனம் செய்யப்பட்டது காப்புறுதி ஸ்தாபனங்கள், பஸ் போக்குவரத்து, ஸ்தாபனங்கள் மற்றும் துறைமுகம், பெற்ரோலியம் ஸ்தாபனங்கள் ஆகியவற்றை அரசாங்கம் பொறுப் பேற்றபோது சகல துறைகளிலும் தொழிலாளருக்கு சலுகைகள் வழங்கப்பட்டன. பாடசாலைகளை பொறுப்பேற்ற அரசாங்கம் தான் கவனம் எடுக்கா விட்டாலும் மற்றைய அரசியல் தலைவர்கள் இவ்விடயத்தில் ஏன் மௌனம்சாதிக்கனேண்டும்.

ஏழு வருடங்களுக்கு மேற்பட்டும் நிரந்தரசேவையில்லை. மற்றும் அரசாங்க ஊழியர் போன்று பதவியுயற்சிக்கு சலுகைகளும் இல்லை.

இப்பிரச்னைகளை நீதியானவழியில் தீர்க்கவேண்டுமானுல் உடனடியாக ஓர் விசாரணைக் குழுநியமிக்கப்படவேண்டும். அத்துடன் பாராளுமன்றத்தில் ஒரு இணைப்பு மசோதா கொண்டுவரப்பட அரசியல் தலைவர்கள் முன்வர வேண்டும்.

சிறுவர்கள் மரணம்

# சந்தேக நபர்கள் இருவரும் தொடர்ந்து ரிமாண்டில்

யாழ்ப்பாணம், ஞாயிறு

குளத்தில் இரு சிறுவர்களின் பிரேதங்கள்மிதந்தது சம்பந்தமாக பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட செல்லன் வயிரவன், வயிரவன் ஐயாத்துரை ஆகிய இருவரும் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் எம். ஜமீல் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

கிட்டினர் சிவபாதம், செல்லையா சுப்பிரமணியம், ஆகிய சிறுவர்களின் மரணம் குறித்து கிட்டினர் தெரிவித்த சந்தேகத்தையடுத்து பொலிசார் நடத்திய புலன் விசாரணையைத் தொடர்ந்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிறுவர்களின் நலன்களைக் கவனிப்பதற்காக அட்வகேட் ரி. தம்பித்துரை, புறக்டர் தளையசிங்கம் யோகநாதனின் அனுசரணையுடன் ஆஜரானுர். சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் ஜிம்மி ராஜரத்தினம், புறக்டர் பிரான்சிஸ் ஆகியோர் ஆஜரானுர்கள்.

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம் மாதம் 26-ந் அதுவரை சந்தேகநபர்களை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார்.

## கலைப்பெருமன்ற நிர்வாகிகள்

அளவெட்டி, ஞாயிறு

அம்மனை கலைப்பெரு மன்றத்தின் வருடாந்த கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர். திரு. பொன். முத்துக்குமாரு, உபதலைவர் பொன். நாகரத்தினம், செயளாளர் வை. குணுளன், உபசெயலாளர் திரு. சி. முருகையா, பொருளாளர் திரு. நா. ஆறுமுகம், துணைப் பொருளாளர் திரு. க. முருகதாசன். ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## தீர்வுகாண முயற்சி

திருவனந்தபுரம், மே 18

கேரளத்தில் கடந்த பத்துத் தினங்களாக நிலவிவரும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஆளும் ஐக்கிய முன்னணி இருவனந்த பரத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எம். ஜி. ஆர்-ஜெயலலிதா
நடித்த
ஒளிவிளக்கு
(ஈஸ்ட்மென் கலர்)
மாதர்களுக்குஅரைக்கட்டணம்


நாடகம், 8-00செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 பேச்சு, 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்திச்சுருக்கம்.


ராணி
[யாழ்ப்பாணம்]
[தினசரி 3காட்சிகள்]
(ஈஸ்ட்மன் கலர்-ஹிந்தி)
புதிய கொப்பி
குறிப்பிட்ட சில தினங்கள்
* ராஜேந்திரகுமார்
* சதனு
நடித்த
ஆர்ஸூ

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜிகணேசன் ★ ஜெயலலிதா
நடித்த
கலாட்டா கல்யாணம்

இங்ஸ்லி (கொழும்பு) அயின் (மன்னார்)
மற்றும் சினிமாஸ் திரைகளில்
நாகேஷ் - சுந்தரராஜன்-வசந்தா- மனோரமா
நடித்த
ஆலயம்
இப்பொழுது நடைபெறுகிறது
கெப்பிட்டல் பிளாஸா மைலன்
(கொழும்பு)
விஜயா (மட்டுநகர்) ஸ்ரீ கிருஷ்ணு (திருமலை) வெலிங்டன் (யாழ்நகர்)



ரவிச்சந்திரன் - காஞ்சனு - நாகேஷ்
நடிக்கும்
அதே கண்கள்


இணைப்பும் இருகும்.

ரிஷிபம்- சிநேகிதர் பீடை, சிந்தனை மிகுதி.

மிதுனம்- ஏமாற்றம் தாக்கும், விழிப்புடன் இரு.

கடகம்- இன்சொல் இயம்புதல், இசை மகிழ்ச்சி.

சிம்மம்: அகாலபோசனம், அவதியும் உண்டு.

கன்னி- அன்னையின் ஆசை, அரசபோர்.

துலாம்- புத்திரர் புகழ் புதுமையில் நாட்டம்.

விருச்சிகம்- பகைமை மூட்டம், பார்த்துநட.

தனுசு- விளிகள் மோதும், வித்திடும் காதல்.

மகரம்- மேலிடத்து எதிர்ப்பு, தொழில்கவலை.

கும்பம்- தாராள சிந்தை, தந்தைவழி ஆதரவு.

மீனம்- பிரயாண விருப்பு, பிறர்சகாயம்.

-சோதிடக் கலாநிதி-

திருமலைவேலுப்பிள்ளை


வெஸ்லி சினிமா
(மானிப்பாய்)
தினசரி6-30, இரவு10-00
சிவாஜி - பண்டரிபாய்
நடித்த
★ கண்கள் ★

Daily 4-30 p.m. only.
The sex life of cities in the world
Forbidden Cities
(Eastman color)
(‘trictly for Adults)

இணுவில்
ஸ்ரீ காலிங்கன்
தினசரி 6-30, 9-30 மணி
சனிபோயா, போயா 2-30 மணி
முத்துராமன் - காஞ்சனு
நடித்த
பாமா விஜயம்

REGAL at JAFFNA
Daily 4-45, 7 &9-45 p m.
Hugh O'Brian,
Mickey Rooney
in
AMBUSH BAY
(Adults)

MANOHARA
JAFFNA
Daily
4-45 7-00&9-45 P.M.
NATALIEVARLEI
in
KIDNAPPING
CACAUSIAN STYLE


வடிவேலு மாஸ்டர் வடிவேலு வாத்தியார்' என்று மாணவர்களாலும், பெரியோர்களாலும் அன்பாகவும் செல்லமாகவும் அழைக்கப்பட்டுவந்த உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆசிரியர் திரு. நல்லதம்பி கந்தையா அவர்களின் மறைவு குறிப்பாக வடமராட்சிப் பகுதி மாணவர்களுக்கு பெருத்த இழப்பை ஏற்படுத்திவிட்டது.

கணிதத்தில் இயற்கையாகவே 'புலி'யாகவிருந்த அவரிடம் படித்து இன்று நல்லநிலையிலுள்ள வல்வெட்டித்துறை, வல்வெட்டி, பருத்தித்துறை, உடுப்பிட்டி போன்றஇடங்களைச் சேர்ந்தவர்கள் ஏராளம் கேத்திரகணிதமோ அட்சரகணிதமோ, கணிதமோ எதைத்தானும் அவரிடம் போய் விளங்கவில்லையென்று கேட்டால் இலகுவாக, சில நிமிட நேரத்திலேயே விளங்கவைத்துவிடுவார். மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுத்தபாடங்களுக்கு ஒரு சதம் கூட ஒருவரிடமும் வாங்கமாட்டார். அதனால்தான் அவர் மறையும்போது ஏழையாக மறைந்தார்.

வல்வெட்டியில் 1920-ல் நல்லதம்பி தம்பதிகளுக்கு புத்திரராக பிறந்த 'வடிவேலு மாஸ்டர்' இளமையில் வல்வெட்டி அ. மி. பாடசாலையிலும், கரணவாய் சைவ வித்தியாசாலையிலும், வல்வெட்டித்துறை சிவகுருவித்தியாசாலையிலும் கல்வி பயின்றார். கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் ஆசிரியர் பயிற்சி பெற்றார். பின்னர் கணிதத்துறையில் பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் விசேஷ பயிற்சி பெற்றார்.

பொலிகண்டியிலும், வல்வெட்டியிலும், பின்னர் உடுப்பிட்டியிலும், இவர் பணியாற்றினார்.

மாணவர்களுக்குச் சேவை செய்வதையும், ஊருக்கு உழைப்பதையும், தன் சேவையாகக்கொண்டு வாழ்ந்த 'வடிவேலு வாத்தியார்' ஆயிரத்தில் ஒரு ஆசிரியர்.

—வே. செல்லத்துரை.

### அபிஷேகம்

கோப்பாய், ஞாயிறு கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் பிரதிஷ்டையாகியுள்ள சிவகாம சுந்தரி சமேத நடராஜ மூர்த்தியின் வருஷாபிஷேகம் இம்மாதம் 20-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

''கூட்டும் இயந்திரம்,'' 'லசிம்' விளையாட்டு, கூர்நுனிகோபுர நடிப்பு, வனநடனம், இசைக்கு இசை

காங்கேசன்துறை கிராம சேவையாளரும் கூட்டுத்தாபன அதிகாரிகளிடமும், யாழ். அரசாங்க அதிபரிடமும் முறையிட்டுள்ளனர்.

## 'ஈழநாடு'

### 10-வது ஆண்டு நிறைவுவிழா

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிரகாரம் ஒரு கட்டுரைப்போட்டி நடைபெறும்.

3 பிரிவுகள் சிரேஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு
மத்தியபிரிவு 1-6-69ல் 14 – 19 வயதிற்கு உட்பட்டவர்களுக்கு
கனிஷ்டபிரிவு 1-6-69-ல் 14வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு

கட்டுரைக்கான விடயங்கள்:

1. காலத்தின் கண்ணுடி
2. காந்தியும் பத்திரிகையும்
3. தேசிய ஒற்றுமை

கட்டுரைகள் கோடிட்ட சாதாரண பரீட்சைக்குரிய விடைத்தாளில் ஒருபக்கத்தில் மாத்திரம் சிரேஷ்டபிரிவு 1500 சொற்களுக்கு மேற்படாமலும், மத்தியபிரிவு 1000 சொற்களுக்கு மேற்படாமலும், கனிஷ்டபிரிவு 700 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி, 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 20-5-69-ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் **10-வது ஆண்டு நிறைவு விழா கட்டுரைப் போட்டி** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

அனுப்பப்படும் ஒவ்வொரு கட்டுரையுடனும் கீழே பிரசுரிக்கப்பட்டுள்ள கூப்பன் ஒவ்வொன்று சேர்க்கப்பட்டிருக்கவேண்டும்.

மத்திய, கனிஷ்ட பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் கட்டுரைகளைத் தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் அனுப்புதல்வேண்டும்.

இக் கட்டுரை சம்பந்தமான பரிசு முதலிய விபரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்.

'ஈழநாடு'
கட்டுரைப் போட்டி

கட்டுரை தலைப்பு: ...........................
...........................

பெயர் : ...........................

விலாசம் : ...........................

பிரிவு: ...........................

ஆஜரானார். சந்தேக நபர்கள் சார்பில் புறக்டர் ஜிம்மி ராஜரத்தினம், புறக்டர் பிரான்சிஸ் ஆகியோர் ஆஜரானார்கள்.

மாஜிஸ்திரேட் மேல்விசாரணையை இம் மாதம் 26-ந் தேதிவரை ஒத்திவைத்து

திருவனந்தபுரம், மே 18 கேரளத்தில் கடந்த பத்துத் தினங்களாக நிலவிவரும் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கு ஆளும் ஐக்கிய முன்னணி திருவனந்தபுரத்தில் இன்று கூறியுள்ளது.

## 'ஈழநாடு'

### 10வது ஆண்டு நிறைவுவிழா

# விளையாட்டுப்போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழ்க் குறிப்பிடப்படும் விளையாட்டுக்கள் ஜூன் 3-ம் திகதி தொடக்கம் நடாத்தப்பட்டு இறுதிப் போட்டிகள் ஜூன் மாதம் 12, 13, 14-ம் திகதிகளில் நடாத்தப்படும்.

### விளையாட்டுக்கள்:

1. மரதன் ஓட்டம்-26 மைல்-யாழ்ப்பாண மாவட்டம்
2. கைப்பந்தாட்டப் போட்டி-இன்ரர் கிளப்
3. கூடைப் பந்தாட்டப் போட்டி-பாடசாலைகளுக்கு
4. கால்பந்தாட்டம்-யாழ்ப்பாண மாவட்டம்
5. வலைப்பந்தாட்டம்-பாடசாலைகளுக்கு
6. தாச்சி

மேற்படி விளையாட்டுகளில் வெற்றி பெறுவோருக்கு பலவித கவர்ச்சிகரமானபரிசில்கள்வழங்கப்படும். இப்போட்டி சம்பந்தமான விபரங்களும், நிபந்தனைகளும் 'ஈழநாடு' பத்திரிகையில் அடிக்கடி பிரசுரிக்கப்படும்.

ஒரு போட்டிக்கு ஒரு கூப்பன் வீதம் அனுப்பப்படல் வேண்டும்.

### விளையாட்டுப் போட்டி கூப்பன்

1, ஜூன்மாதம் 1-ம் திகதிக்கு முன் ஆறுமாதங்களுக்குத் தொடர்ந்து யாழ்மாவட்டத்தில் நிரந்தர வாசியாக இருந்தேன்.
2. நான்பங்குபற்றும் விளையாட்டின் விபரம்...
...........................
...........................
3. இப்போட்டியின்போது தகராறுகள் ஏற்படின் மத்தியஸ்தர்களின் தீர்ப்பை ஏற்கத் தயாராக உள்ளேன்.
4. இப்போட்டியில் எனதுவிருப்பத்தின் பேரிலேயே பங்குபற்றும் நான் போட்டியின்போது காயங்கள் ஏற்படின் அதற்குநஷ்டஈடு கோரமாட்டேன்'
5. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு ஒப்புக்கொண்டு நான் தெரிவித்த விபரங்கள் உண்மையானதும் சரியானதுமென உறுதிப்படுத்துகிறேன்.

...........................
கையொப்பம்

விலாசம்
...........................
...........................
...........................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேஷிய இனக்கலவரம் தணிகிறது

## பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டில் தலைநகர்

## அமைதியைக் குலைப்போர் நாடு கடத்தப் படுவர்

கோலாலம்பூர், மே 18

மலேஷியாவைக் கலக்கிய பயங்கர இனக்கலவரம் தணிந்து கொண்டு வருவதாக உத்தியோக பூர்வமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

தலைநகரில் நடந்துவந்த வெறியாட்டம் அடக்கப்பட்டு, நகரம் முழுவதும் பாதுகாப்புப் படைகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டவரப் பட்டுவிட்டதாக செய்திகள் கூறுகின்றன.

கலவரத்தை தூண்டுவோர் நாடுகடத்தப்படுவார்களென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## துன் தலைமையில் தேசிய சபை

மலேஷிய துணைப் பிரதமர் துன் அப்துல் ரஸ்ஸாக் தலைமையில் எட்டுப்பேர் அடங்கிய உயர் தேசிய நடவடிக்கைசபை நாட்டின் நிர்வாகப் பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டுள்ளது. இந்தச் சபையில் மலேஷிய மந்திரி சபையிலுள்ள நால்வரும், முப்படைத்தலைவர்கள் மூவரும் அங்கம் வகிக்கின்றனர். உள்நாட்டு மந்திரி நிதிமந்திரி, தொழில் மந்திரி, தகவல் தொடர்பு மந்திரி ஆகிய நான்கு அமைச்சர்களும் இந்தச்சபையில் உள்ளனர். மலேஷிய மந்திரிசபையிலுள்ள தமிழரான தொழில் அமைச்சர் திரு. சம்பந்தனும் இந்த உயர் தேசிய நடவடிக்கை சபையில் அங்கம் வகிப்பவர்களில் ஒருவராவர்

### முழு அதிகாரம்

நெருக்கடியான நிலைமைகளின் போது தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதிகாரங்களை உபயோகப்படுத்தவும் இந்த தேசிய சபைக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்புக்கான சகல நடவடிக்கைகளிலும் ராணுவம் முக்கிய பங்காற்றும். தலைநகரான கோலாலம்பூரில் மலேய்-சீனுக்காரருக்கிடையில் ஏற்பட்ட பயங்கர இனக் கலவரத்தில் இதுவரை 102பேர் பலியாகியுள்ளனரென உத்தியோக பூர்வமான தகவல்கள் தெரிவித்தன. 200 பேர் கொல்லப்பட்டுள்ளனரென உத்தியோக பூர்வமற்ற மற்றொரு செய்தி கூறுகிறது. 300 பேர் படுகாயமடைந்துள்ளனராம்.

### நாடு கடத்தப்படுவர்

நாட்டில் இனக்கலவரத்தைத் தூண்டிவிடக்காரணமாக இருந்த 600 பேர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும் நாட்டில் நடமாடும் தீயசக்திகளை கண்டுபிடிப்பதில் பாதுகாப்புப் படைகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

நாட்டில் குழப்பத்தைத் தூண்டி, அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்துபவர்களுக்கு கடும் தண்டனைவிதிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. கைது செய்யப்படுபவர்களின் பிரஜாவுரிமை ரத்துச் செய்யப்படுவதுடன், அவர்கள் நாடு கடத்தப்படுவார்களென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




மே முதலாந்திகதியன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சீன சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஊர்வலத்தைப் பொலிஸார் தடியடிப் பிரயோகம் செய்து கலைத்ததைக் கண்டிக்கும் முகமாக மேற்படி கட்சியினர் கடந்த வியாழக்கிழமை சுன்னாகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி ஊர்வலமாக வரும்போது இப்படம் எடுக்கப்பட்டது.

## மனிதன் சந்திரனில் இறங்கும் கடைசி ஒத்திகை ஆரம்பம்

கென்னடிமுனை, மே 18

சந்திரனில் மனிதன் இறங்குவதற்கான ஆய... ...முன் எப்பொழுதுமே நடக்கவில்லை. ஆனால் அப்போலோ-10 விண்வெளி ...

## தமிழ் நாடு, ஆந்திரா கரைகளில் பெருமழை

### ரயில் சேவை பாதிப்பு

சென்னை, மே 18

தமிழ்நாடு ஆந்திரப்பிரதேசக் கரையோரங்களில் பெருமழை பெய்திருக்கிறது. ரயில் சேவைகள்பாதிக்கப்பட்டதுடன், சில பகுதிகளில் பலத்த சேதமும் ஏற்பட்டுள்ளது.

ஆந்திரப்பிரதேச கரையோரப் பகுதியில் திடீரென வீசிய சுழல்புயலைத்தொடர்ந்து இந்தப்பெருமழைபெய்தது.

ஆந்திரப்பிரதேச கரையோரத்திலுள்ள சில பகுதிகளிலும், தமிழ்நாட்டின் கரையோர பகுதிகளிலுள்ள சிலஇடங்களிலும்குடிசைகள் விழுந்து வெள்ளத்துடன் அடித்துச்செல்லப்பட்டு விட்டன. மரங்கள் சாய்ந்தன. தாழ்வுப் பகுதிகள் நீருக்குள் அமிழ்ந்து விட்டன.

முக்கிய ரயில் சேவைகளான சென்னை - கௌரா எக்ஸ்பிரஸ் ரயில், அரசாங்க ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன. மற்றைய ரயில்களும் சேவையிலீடுபடவில்லை.

## பிரிட்டனில் பொறியியல் பயிற்சி பெறும் இலங்கை மாணவா

லண்டன், மே. 18

இலங்கையைச் சேர்ந்த ... பொறியியல் நிபுணர் ஒருவர் ... இம்பீரியல் கல்லூரியில் காங்கிரீட் அமைப்புத் பொறியியலில் எம். எஸ். ஸி. பட்டத்திற்காகப் படித்து வருகிறார். காங்கிரீட் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டு வரும் துரித முன்னேற்றங்கள்பற்றி அறிந்துகொள்

## 7பேருக்கு



அன்றிரவு யாழ். முற்றவெளியில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருக்கிறார். — ஏ.வி.எம்.

## 'அரசியல் வளர்ச்சிக்காகவே சிங்களம் புகுத்தப்படுகிறது'

### — கல்லூரி அதிபர்

அளவெட்டி, ஞாயிறு

'கல்வியமைச்சர் சட்டங்களை ஆக்கும்போதும் சட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவரும்போதும் ஆசிரியர்களை கலந்தாலோசிப்பதில்லை. பாடசாலை விடயங்கள் பற்றி ஆராயப்படும்போது இனியாவது ஆசிரியர்களை கலந்தாலோசித்து சட்டத்தைஆக்க முன்வர வேண்டும்.'

இவ்வாறு யாழ். நகரில் நிகழ்ந்த அகில இலங்கை சுவீகரிக்கப்பட்ட பாடசாலை ஊழியர் சங்க 10-வது ஆண்டு கூட்டத்தில் பேசுகையில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் திரு. சபாலிங்கம் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: அரசு சட்டங்களையும், இடமாற்றத்திட்டங்களையும் கொண்டுவருகிறது. இதனை நாம் ஏன் எதிர்க்கிறோம். எமது உரிமை பறிக்கப்படும் வகையில் இடமாற்றம் நிகழ்வதால்தான் இதேநிலை தான் பாடசாலை ஆசிரியரல்லாத ஊழியரின் நிலையும்.

பாடசாலைகளில் பாரபட்சமின்றி ஊழியர்களை நியமிக்க அரசாங்கம் நடவடிக்கைஎடுக்கவேண்டும். மாணவர் தொகைக்கு ஏற்பவே அரசு ஊழியர்களை நியமிக்க வேண்டும். மாணவர் தொகைக்கு தகுந்ததாக ஊழியர்கள் நியமிக்கப்படாததால்தான் பல பிரச்னைகள் தலைதூக்குகின்றன.

எமது இரு மாகாணங்களிலும் கடமையாற்றும் ஊழியர்களுக்கு ஏன் சிங்களம் தேவை. அரசியல் வளர்ச்சிக்காகவே எம்மிடையே சிங்களம் புகுத்தப்படுகிறது.

மற்ற ஊழியர்களுக்கு வழங்கப்படும் பென்சன் திட்டம்போல பாடசாலை ஊழியர்களுக்கும் பென்சன் திட்டம் வகுத்து அவர்களின் பிற்கால வாழ்க்கை சிறப்படைய அரசு உதவவேண்டும்.

## தரமான அரிசி கிடைக்கும்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு அரசினர் அரிசி விநியோக நிலையத்திலிருந்து வழங்கப்பட்டுவந்த அரிசியின் தரத்தைப்பற்றி வெளிவந்த செய்தியைத் தொடர்ந்து, தற்போது மேற்படி விநியோக நிலையத்துக்கு மில்காரர்களால் கோட்டா முறையில் விநியோகம் செய்யும் அரிசியை முல்லைத்தீவுக் காரியாதிகாரி பரிசோதனை செய்து சிபார்சு செய்தபின்தான் அந்த அரிசியை கூப்பனுக்கு விநியோகம் செய்யவேண்டும் என வவனியா பிரதிஉணவுக் கட்டுப்பாட்டதிகாரிஉத்தரவிட்டுள்ளார்.

## பிரதமரின் குறிக்கோள்

கேகாலை, ஞாயிறு

தேசிய அரசாங்கம் நிறுவப்பட்ட பின்னரே தேசிய ஒற்றுமை நிலைநிறுத்தப்பட்டது. கடந்த நான்கு வருடங்களாக, வகுப்புவாத நிலையில்லாத காரணத்தினால்தான் நாடு அபிவிருத்தியில் கவனம்செலுத்த முடிந்தது.

திவடுவாவ மகாவித்தியாலயத்தில் நடந்த கூட்டமொன்றில், பிரதமர் டட்லி சேனநாயக்கா மேற்கண்டவாறு கூறினார்.

பிரதமர் மேலும் கூறியதாவது: தேசியஐக்கியத்தை நிலைநாட்டுவதும், உணவில் சுயதேவையைப் பூர்த்தி செய்வதும்தான்எனது குறிக்கோள். தாங்கள் இன்று ஐக்கியப்பட்டு முன்னேறுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

......

## 27 தமிழர்கள் நியமனம்

### தேரோ ஆட்சேபம்

கோட்டை, ஞாயிறு

இலங்கை போக்குவரத்துச்சபை நிர்வாக பகுதிக்கு 27 தமிழர்களும், 2 முஸ்லிம்களும் நியமிக்கப்பட்டிருப்பதை ஆட்சேபித்து மகாசங்க பெரமுன காரியதரிசி வண. மிட்டியாகொட குணரத்தின தேரோ, பிரதமமந்திரிக்கும், தேசிய சேவை மந்திரிக்கும் தந்தி அனுப்பியுள்ளார்.

32 பேர்கள் நிர்வாக பகுதிக்கு நியமிக்கப்பட்டிருப்பதாகவும், இவர்களில் சிங்களவர் மூவர் மட்டுமே நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பெண்டாக்டர் நியமனம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியின் சரித்திரத்தில் முதல் தடவையாக பெண் டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடைசி ஒத்திகை ஆரம்பம்

கென்னடிமுனை, மே 18

சந்திரனில் மனிதன் இறங்குவதற்கான ஆயத்துநிறைந்தும், வரலாற்றுப்புகழ் மிக்கதுமான கடைசி ஒத்திகை இன்று நள்ளிரவுக்குச் சற்றுப் பின்னதாக ஆரம்பமாகவுள்ளது.

அமெரிக்காவின் அப்போலோ-10 தாமஸ் பி. ஸ்டார்ஃபர்டு, ஜான்டபிள் யூயங், யுஜீன் ஏ. செர்னன் ஆகிய மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனை நோக்கி புறப்படும்.

## அண்டவெளியில் சாகசம்

எட்டுத் தினங்கள் அண்டவெளியில் சாகசங்கள் நிகழ்த்திவிட்டுத் திரும்பவிருக்கும் அப்போலோ-10 பயணமும் அனுபவமும் ஜூலை 16-ம் திகதி சந்திரனில் மனிதனை இறக்குவதற்காக வானவெளி நோக்கிச் செல்லவிருக்கும் அப்போலோ-11க்கு கடைசி ஒத்திகையாக அமையும்.

சந்திரனை மனிதன் நேருக்குநேர் நின்று பார்த்துத் தெளிவாகப் படம்பிடித்தபயம் முன்எப்பொழுதுமே நடக்கவில்லை. ஆனால் அப்போலோ-10 விண்வெளி வீரர்கள் இந்த அற்புத சாதனையை நிகழ்த்துவர்.

## அனுபவம் பழமை

இந்த விண்வெளிப் பயணத்தின்போது தலைமை விண்வெளிவீரராகக் கடமையாற்றும் தாமஸ்ஸ்டாஃர்டுக்கு வயது 38 ஜெமினி-9 விண்வெளிக்கப்பலில் பயணம் செய்த அனுபவம் இவருக்குண்டு. ஜெமினி-10 விண்வெளிக்கலத்தில் பயணம் செய்த அனுபவம் அப்போலோ-10 பயணம் செய்யும் மற்றொரு விண்வெளி வீரரான ஜான் யங்குக்கு உண்டு-யுஜீன் ஏ. செர்னனுக்கு ஜெமினி-9ல் தாமஸுடன் விண்வெளியில் பயணம் செய்த அனுபவம் இருக்கிறது.

இன்று இந்தப் பயணம் ஆரம்பமாகும்போது காலநிலை நன்றாக இருக்கமாட்டாதென கேப்கென்னடியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## 7பேருக்கு மரணதண்டனை

பக்தாத், மே 18

ஈராக்கில்7பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டுக்கு எதிராக வேவு பார்த்ததாக இவர்கள் மீது குற்றஞ் சாட்டப்பட்டது. இந்த 7 பேரில் இருவர் துருப்புகள்.

## 2,600 பேர் பலி

புதுடில்லி, மே 18

நோயில் கொடுமைக்கு 2,600 பேர் பலியாகியுள்ளனர். ராஜஸ்தான் ராஜ்யத்தில் கடந்த ஏழு மாதங்களில் நோயினால் மாண்டவர்தொகை இவ்வளவை எட்டியுள்ளது.

## ஜவகர்லால் நேரு விருது

புதுடில்லி, மே 18

ஜவகர்லால் நேருவின் விருது கான் அப்துல் கபார் கான் என்பவருக்குகிடைத்துள்ளது. இதுமுன்னர் ஐ. நா. காரியதரிசி திரு. யுதாண்டுக்கு முதல் தடவையாக வழங்கப்பட்டது. பின்னர் இரண்டாவது தடவையாக அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் மாகில் என்பவருக்குகிடைத்தது இதில் ஒரு லட்சம் ரூபா பரிசாகக் கிடைக்கும்.

## லண்டனிலிருந்து இலங்கை நாணயங்கள்

லண்டன் மே 18

லண்டனிலுள்ள பிரிட்டிஷ் நாணயசாலை கடந்த ஆண்டு இலங்கை உட்பட 34 உலக நாடுகளுக்கு 460,000,000 நாணயங்களை அச்சிட்டுக் கொடுத்துள்ளது. 10 வேறுபட்ட உலோக கலவையில் 79 ரகமான நாணய இனங்களை அச்சிட்டு இந்நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

1968-ம் ஆண்டில்மட்டும், லண்டன்லன்ரீசன்ட், வேல்ஸ் ஆகிய இடங்களிலுள்ள பிரிட்டிஸ் நாணயசாலைகள் மொத்தம் 135 கோடியே 70லட்சம் நாணயங்களை உற்பத்தி செய்துள்ளன. இவற்றில் சுமார் 90 கோடி பிரிட்டிஷ் நாணயங்களாகும்.

லண்டன், மே. 18

இலங்கையைச் சேர்ந்த சிவில் பொறியியல் நிபுணர் ஒருவர் தற்சமயம் லண்டன் இம்பீரியல் கல்லூரியில் கான்கிரீட் அமைப்புத் தொழில்நுட்பம்பற்றிப் பயின்று வருகிறார். இவர்தான் திரு. கனகசபை தர்மரத்தினம். இலங்கை பொதுமராமத்து அமைச்சில் பாலம் அமைப்பு பொறியியல் நிபுணராகக் கடமையாற்றும் அவர் கொழும்புத் திட்ட உபகாரநிதி பெற்று இரண்டுவருட உயர் பட்டதாரிப் படிப்பை மேற்கொண்டுள்ளார்.

பத்து வருடங்களுக்கு முன்னர் இலங்கை சர்வகலாசாலையில் பொறியியல் துறையில் பி. எஸ். ஸி. பட்டம் பெற்ற இவர் லண்டன் இம்பீரியல் கல்லூரியில் பொறியியலில் எம். எஸ். ஸி. பட்டத்திற்காகப் படித்து வருகிறார். கான்கிரீட் தொழில் நுட்பத்தில் ஏற்பட்டு வரும் துரித முன்னேற்றங்கள்பற்றி அறிந்துகொள்வதற்கு தமது படிப்பு பெரிதும் பயனுள்ளதாக இருப்பதாக திரு. தர்மரெத்தினம் குறிப்பிட்டார்.

கான்கிறீட்டைப் பாவனை செய்யும் 'புதிய முறைகள் சம்பந்தமாகவும், கட்டிட அமைப்பு சேர்மானங்கள் பற்றியும் திரு. தர்மரத்தினம் பயின்று வருகின்றார். இரண்டாவது வருடப் பயிற்சியின்போது அவர் பிரிட்டிஷ் ஆராய்ச்சித் திட்டங்களில் வேலைக்கமர்த்தப்படுவதுடன் பிரிட்டனிலுள்ள கட்டிட நிர்மாண வேலைத்தளங்களுக்கும் விஜயம் செய்வார்.

## "உரிமைகள் பெறும்வழியை தமிழர் உணர்ந்துவிட்டனர்' — வவனியா எம். பி.

வவனியா, ஞாயிறு

சிங்கள மக்களுடன் ஒற்றுமையாக ஐக்கியப்பட்டு வாழ்ந்துதான் தமிழினத்திற்கு விமோசனம் பெறமுடியுமென்பதை இன்று தமிழ்மக்கள் உணர்ந்துவிட்டார்கள் என்று வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் கோவில்குளத்தில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் பேசும்போது கூறினார்.

திரு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது; 1958ம் ஆண்டு நடந்த இனக்கலவரம் போன்று மீண்டும் ஒரு கலவரம் ஏற்படுவதை இந்த நாட்டில் வாழும் எவரும் விரும்பமாட்டார்கள்.

அரசியல் செல்வாக்குப் பெறுவதற்காகவே தேசிய அரசாங்கத்தை விட்டுச்சிலர் வெளியேறினார்கள். வடக்கு கிழக்கு மாகாணங்களில் சில தொகுதிகளைக் கைப்பற்றுவதற்காக, கடந்த 15 வருடங்களாக சிலர் நடந்துவரும் நடவடிக்கைகளையிட்டுத் தமிழ்மக்கள் அலுப்படைந்துவிட்டார்கள்.

இப்படியான நடவடிக்கைகளால் சலிப்படைந்த தமிழினம், சிங்கள மக்களுடன் ஒற்றுமைப்பட்டே, தமது உரிமைகளைப் பெறமுடியுமென்பதை உணர்ந்துவிட்டார்கள்.

## நோயாளர் கஷ்டம்

முல்லைத்தீவு, ஞாயிறு

முல்லைத்தீவு அரசினர்ஆஸ்பத்திரி வார்டுகளில் தங்கியிருக்கும் நோயாளரிற் பலர் படுக்கையின்றி நிலத்திலே கிடந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். பகலில் ஈக்களின் தொல்லையினாலும் இரவில் நுளம்புகளின் தொல்லையினாலும் நோயாளர் பெரிதும் கஷ்டமடைகின்றனர்.

## அதிபரின் பாராட்டு

சுழிபுரம், ஞாயிறு

"திறமைசாலிகளை தக்கபடி கௌரவிக்காததால் எமது நாடு சகல துறையிலும் பின்தங்கியுள்ளது எமது நாட்டிலுள்ள கல்விமான்கள், நிபுணர்கள் வெளிநாட்டில் நல்ல கௌரவத்துடன் வாழ்வதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். மேலும் நமது நாட்டிலுள்ள திறமைசாலிகளை வெளிநாடு செல்லவிடாது சகல வசதிகளையும் அவர்களுக்குசெய்து கொடுத்து அவர்களின் திறமையை நாட்டுக்காக பயன்படுத்த அரசாங்கம் முன்வர வேண்டும்."

இவ்வாறு கொழும்புத் துறை ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளராகக் கடமையாற்றி சாம்பியா செல்லும் வி. இ. நிக்கலஸுக்கு அளித்த பிரிவுபசார விழாவுக்கு தலைமைவகித்துப் பேசிய கலாசாலை அதிபர் எஸ். விசுவலிங்கம் குறிப்பிட்டார்.

அன்றிரவு யாழ். முற்றவெளியில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில் திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா பேசிக்கொண்டிருக்கிறார். — ஏ.வி.எம்.

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், திங்

திருநெல்வேலி மும்மூர்த்திகள் இசைமன்றத்தின் 6 வது ஆண்டு இசை விழா இன்று ஆரம்பமாகிறது. திருநெல்வேலி அம்மன் சிவன் கோவில் முன்றலில் அரம்பமாகும் இவ்விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள் வழக்கறிஞர் திரு. கே. வி எஸ். சண்முகநாதன் தலைமையில் ஆரம்பமாகும்.

நிகழ்ச்சிகள் விபரம்:-

மாலை 6 மணி: கான மூர்த்தி சுந்தரமூர்த்தியின் நாதஸ்வரம்

7 மணி: மும்மூர்த்திகள் இசைமன்ற மாணவர்களின் பாட்டு

7.15 மணி: மாணவர்களின் மிருதங்கக் கச்சேரி

7 30மணி சங்கீதபூஷணம் எஸ். சிவசோதி-பாட்டு

8.30 மணி: திரு. கே. அருளானந்தம்-புல் லாங் குழல்

9.30மணி; சங்கீதபூஷணம் திரு. வி. ஜெயவீரசிங்கம் பாட்டு

10.30 மணி: திரு. எஸ். இராசையா-பாட்டு

11.30 மணி: சிவராதா கோஷ்டியினரின் மெல்லிசை

(கா. நி)

## தமிழ்விழா நடத்தமுடிவு

அளவெட்டி, ஞாயிறு

அம்பனை கலைப் பெருமன்றத்தினர் செப்டம்பர் மாதத்தில் தெல்லிப்பழையில் ஓர் தமிழ் விழாவை நடத்துவதெனமுடிவுசெய்துள்ளனர்.

இவ்விழாவுக்கு தமிழகத்திலிருந்து அறிஞர்களையும், கலைஞர்களையும் அழைப்பதெனவும், ஈழத்து பழம்பெரும் அறிஞர்களையும், கலைஞர்களையும் முறையே பாராட்டி கௌரவிப்பது எனவும்முடிவுசெய்துள்ளது.

## சமசமாஜக் கட்சி தலைவர் தோல்வி

பதுளை, ஞாயிறு

பதுளை மாவட்டத்தில் உள்ள எட்டம்பிட்டியா கிராமசபைதேர்தலில் சமசமாஜக்கட்சி தலைவரை, யூ. என். பி. அபேட்சகர் தோற்கடித்தார்.

யோகம் செய்யவேண்டும் என வவனியா பிரதிஉணவுக் கட்டுப்பாட்டதிகாரிஉத்தரவிட்டுள்ளார்.

முல்லைத்தீவு ஆஸ்பத்திரியின் சரித்திரத்தில் முதல் தடவையாக பெண் டாக்டர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்,

## துங்கு சொல்கிறார்: 'கம்யூனிஸ்ட்டுகள் மட்டும்காரணமல்ல'

நாட்டில் ஏற்பட்ட இனக கலவரத்துக்கு தவறுதலாக கம்யூனிஸ்டுகள்மீது மட்டும் பழி சுமத்தமாட்டேன். இரகசியமாக இயங்கும் சிலதீய சக்திகளும், கூலிபெறும் கும்பல்களும் இந்த இனக் கலவரத்துக்குக் காரணமாக உள்ளார்கள் என்று மலேஷிய பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் நேற்றுக் கூறினார்.



டெலிவிஷன் காட்சியொன்றில் தோன்றி அவர் நாட்டு மக்களுக்கு நிலைமையை எடுத்துக் கூறினார்.

இரகசியமாகவும், கூலிக்கும் நாட்டைக் குலைக்கும் சதி வேலைகளில் ஈடுபடும் இந்தக் கும்பல்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டு கடும் தண்டனைக்குள்ளாக்கப்படுவார்களென்றும் பிரதமர் துங்கு எச்சரித்தார்.

நாட்டில் நடந்த அசம்பாவித சம்பவங்கள் குறித்து வெளிநாட்டுப் பத்திரிகைகள் தவறான செய்திகளை வெளியிட்டுள்ளதாகவும் குற்றஞ்சாட்டினார்

மிகைப்படுத்தியும், பிரமாதப்படுத்தியும் வெளிநாட்டுப் பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டி பெருத்த கவலை தெரிவித்தார்.


## 'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழா மாணவர் பேச்சுப் போட்டி

'ஈழநாடு' 10-வது ஆண்டு நிறைவு விழாவையொட்டி கீழே குறிப்பிடப்படும் விபரத்தின் பிரகாரம் ஒரு பேச்சுப்போட்டி நடைபெறும்.

**3 பிரிவுகள்:**

சிரஷ்ட பிரிவு 1-6-69-ல் 19 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

மத்திய பிரிவு 1-6-69-ல் 16 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

கனிஷ்ட பிரிவு 1-6-69-ல 12 வயதிற்கு கீழ்ப் பட்டவர்களுக்கு.

### பேச்சுக்கான விடயங்கள்:

**சிரேஷ்ட பிரிவு**

1. மக்களும் பத்திரிகைகளும். 2. தேசிய ஒற்றுமை. 3. விஞ்ஞானக்கல்வி. 4. வண. ஞானப்பிரகாசர். 5. 'ஈழநாடு' பத்திரிகை. 6. இஸ்லாமும் தமிழும். 7. கூட்டுறவும் பொருளாதார நலனும்.

**மத்திய பிரிவு**

1. உணவுஉற்பத்தி. 2. பத்திரிகையும்வாழ்க்கையும். 3. சுவாமி விபுலானந்தர். 4. 'ஈழநாடு' பத்திரிகை. 5. உமறுப் புலவர். 6. இலங்கையின் கைத்தொழில் விருத்தி.

**கனிஷ்ட பிரிவு**

1. காந்திமகான். 2. ஆறுமுக நாவலர். 3. 'ஈழநாடு' பத்திரிகை. 4. உடற்பயிற்சி. 5. எமது நாடு. 6. நபிகள் நாயகம்.

ஒவ்வொருவருக்கும் 10 நிமிடங்கள்மட்டும் அனுமதிக்கப்படும்.

விண்ணப்பங்கள் யாவும் 'ஈழநாடு' மாணவர் பேச்சுப்போட்டிக் கூப்பனில் நிரப்பப்பட்டு, தாங்கள் பயிலும் கல்லூரி அதிபர் மூலம் 'ஈழநாடு', த. பெ. இல. 49, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு 25-5-69-ந் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் **10-வது ஆண்டு நிறைவு விழா பேச்சுப் போட்டி** என்று குறிப்பிடுதல் வேண்டும்.

இப்பேச்சுப்போட்டி சம்பந்தமான பரிசு முதலிய விபரங்கள் 'ஈழநாடு' பத்திரிகையில் பிரசுரிக்கப் படும்.

**'ஈழநாடு' 10-வது ஆண்டு விழா**

**மாணவர் பேச்சுப் போட்டி**

பெயர்: ..........................................

விலாசம்: ..........................................

..........................................

பிரிவு: ..........................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

என்னைப்போன்ற பலர் அழியலாம்; ஆனல் உண்மை அழியாது. உண்மையின் தன்மையை ஒரு மயிரிழைகூடக் குறைத்துவிடக்கூடாது. தவறுகள் செய்யும் என்னைப்போன்ற மனிதர்களோடு ஒப்பிட்டு உண்மையின் தன்மையைக் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது.

—மகாத்மாகாந்தி


# ஈழநாடு

Eelanadu National Tamil Da y
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம், சௌமியவருஷம் வைகாசி மாதம் 6-ந் திகதி (19-5-69)


## மலேஷியப் படிப்பினை

ஆதிக்கப் போட்டியில் வகுப்பு வாதம் இன்னும் முக்கிய அங்கம்வகிக்கும் நாடுகளுக்கு மலேஷிய துயரச்சம்பவங்கள் ஓர் எச்சரிக்கையாக இருக்கவேண்டுமென்றும் இன, மத துவேஷத்தை அரசியலுக்குப் பயன்படுத்தமுனையும் சக்திகளைக் கட்டுப்படுத்தாவிடில் வன்முறை தலைதூக்குமென்றும் மலேஷிய துயரச் சம்பவங்களிலிருந்து நமது நாடு அதுவும் குறிப்பாக தேர்தல் நெருங்கும்இச் சமயத்தில் படிக்கவேண்டியவை பலவென்றும் கொழும்பிலிருந்து வெளிவரும் 'சன்' என்னும் ஆங்கிலத் தினசரியின் நேற்றைய ஆசிரியத் தலையங்கம் சரியாக எடுத்துக்காட்டியிருக்கிறது. 'ஊருக்குபதேசம் உனக்கல்ல' என்ற நிலையில் இத்தலையங்கம் தீட்டப்பட்டிருக்க மாட்டாதென்று நம்புவோமாக!

'சன்' பத்திரிகையின் இதர பக்கங்களைப் புரட்டிப்பார்த்தால் அதே பத்திரிகையில் 'துரும்பையும் தூணுக்கும்' முறையில் சிறிய விஷயத்தையும் பெரிது படுத்தி இன, மத வேற்றுமைகளைத் தூண்டிவிடும் விஷமிகளுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளிக்கக் கூடியதாக செய்திகள் பிரசுரிக்கப்படுகின்றன. அந்தப் பத்திரிகை சில சமயங்களில் எழுதும் தலையங்கங்கள்கூட இங்கு வகுப்புவாதத்தை தூண்டி அரசியல் இலாபம் தேடுபவர்களுக்கும் அதை வைத்து, "வெந்த வீட்டில் பிடுங்கியது ஆதாயம்" என்ற மனப்பான்மையுடைய சமூக விரோத சக்திகளுக்கும் நல்ல வாய்ப்பளிப்பதாக அமைந்துவிடுகின்றன. 'சன்' பத்திரிகை மட்டுமல்லாது, அதன் சகோதரப் பத்திரிகைகளான சுயாதீனப் பத்திரிகா சமாஜத் [illegible]

கருத்துமாக இருக்கும் சில அரசியல்வாதிகள்தான் அரசியல் இலாபத்துக்காக இன, மத துவேஷத்தைக் கிளப்புகிறார்களென்பதில்லை; சில பொறுப்பு வாய்ந்த பத்திரிகைகளும் இந்தக் கைங்கரியத்தைச் செய்துவருகின்றன. அதுவும் தேர்தல் காலம் நெருங்கியதும் இருதரப்பினரும் இதைச்செய்து அப்பாவி மக்களைத் தவருன வழிக்கு இட்டுச்செல்ல எத்தனிக்கின்றனர்.

மலேஷியாவில் தேர்தல் நடந்து முடிந்ததும் மலாய் மக்களுக்கும் சீனமக்களுக்குமிடையில் இனக்கலகம் வெடித்துக் கிளம்பி பல உயிர்களைப் பலிவாங்கி உடைமைகளுக்கும் பலத்த சேதம் ஏற்படுத்தியதென்றாலும் தேர்தல் சமயத்தில் நடந்த துவேஷப் பிரசாரங்களும் இன, மத விரோதச் சம்பவங்களுமே கலகம் ஏற்படக் காரணமாக இருந்திருக்கின்றன. இதில் அங்குள்ள பத்திரிகைகளுக்கும் பங்கில்லாமலில்லை.

நமது நாடு 1958-ம் ஆண்டில் வகுப்புக்கலவரத்தின் விளைவை அனுபவபூர்வமாகக் கண்டிருக்கிறது. வகுப்புக்கலவரம் நாட்டில் எந்த ஒரு மூலையில் தோன்றினலும் அதன் விளைவு எப்படியிருக்குமென்பதை பலரும் அறிவர். இதனல் பெரிதும் பாதிக்கப்படுபவர்கள் பெரும்பாலும் அப்பாவி மக்கள் தான். ஆனலும் இதை சில அரசியல்வாதிகளும் தீவிரவாதிகளும் சில பத்திரிகைகளும் இன்று மறந்துவிட்டதாகவே தோன்றுகிறது. இன, மத பூசல்களை மீண்டும் கிளப்பி விடுவதற்கு சில சக்திகள் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகவே தென்படு [illegible]

## இலங்கைத் தமிழர்நிலை

# இன உணர்ச்சியை விட சாதி உணர்ச்சி ஓங்கி நிற்கிறது

# தமிழர் கட்சிகளுக்கிடையில் ஒருமைப்பாட்டை வலியுறுத்தினேன்

சமீபத்தில் இலங்கைக்கு வந்து திரும்பியஇந்திய தமிழரசுக் கழகத் தலைவரும் 'தமிழ்நாடு' சட்டமன்ற உறுப்பினருமான 'சிலம்புச் செல்வர்' திரு. ம. பொ. சிவஞானம் இலங்கையிலிருந்து திரும்பியதும் 'இலங்கைத் தமிழர் நிலை' பற்றிய தமது 'செங்கோல்' பத்திரிகையில் எழுதிய முதல் கட்டுரை 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்திருந்தது. இன்று திரு. ம. பொ. சி. எழுதிய இரண்டாவது கட்டுரை வெளியிடப்படுகிறது.

எனது இலங்கைப்பயணம் பற்றி சிறிது விரிவாகவே செங்கோலில் எழுத நினைத்தேன். ஆனல் ஓய்வின்மை அதற்குத் தடையாக இருக்கிறது. ஆயினும் சுருக்கமாகவேனும் எனது அனுபவத்தைச் சொல்லிவிட விரும்புகிறேன்.

கடந்த இருபதாண்டுகளிலே எத்தனையோ முறை இலங்கைத் தீவுக்குச் சென்றிருக்கிறேன். அப்போதெல்லாம் இலக்கிய மன்றங்களுக்கு அழைக்கப்பட்டுஇலக்கிய விழாக்களில் மட்டுமே பங்குபெற்றுத் திரும்பினேன்.

இந்தமுறைதான் அரசியல் கட்சி ஒன்று விடுத்த அழைப்பை ஏற்றுச் சென்றேன். அது இலங்கைத் தமிழரசுக் கட்சியாகும்.

இக் கட்சி முன்னம் பல முறை தான் நடத்திய நிகழ்ச்சிகளுக்காக என்னை அழைத்ததுண்டு. அந்த அழைப்பை நான் ஏற்கவில்லை. அதற்கான காரணங்களிலே ஒன்று இலங்கை அரசியலிலே - அந்த நாட்டில் இருந்துகொண்டு - ஈடுபட விரும்பாததாகும்.

### கழகம் அளித்த ஆதரவு

இலங்கைத் தமிழரின் அரசியலிலிருந்து முற்றிலும் என் மனத்தை ஒதுக்கிக் கொண்டுவிட நான் விரும்புகிறேன் இல்லை. அப்படி ஒதுக்கிக்கொள்வது தமிழ் இனத்துக்கு நான் ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாகும். [illegible]

வைத்துள்ள இந்திய அரசியல் வாதிகளிலே நான்முதல்வனுக இருப்பேன் என்பதில் எனக்கு ஐயமில்லை.

இந்த முறையும் இலங்கைத் தமிழரின் இப்போதைய நிலையை நேரில்கண்டறியும் ஆர்வம் உடையவனுகத்தான் நான் அந்தத் தீவுக்குச் சென்றேன்.

இலங்கை தமிழரசுக்கட்சியினர் தங்கள் கட்சி மாநாட்டையொட்டி இலக்கிய விழாவொன்றும் நடத்துவதாகவும் அதிலே நான் பேசவேண்டுமென்றும் எனக்குக் கடிதத்தின்மூலம் அழைப்பு விடுத்திருந்தார்கள்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியிடம் அது தோன்றிய நாள்தொட்டே எனக்கும் மிகுந்த மதிப்பும் நம்பிக்கையும் உண்டு அந்தக்கட்சி பூர்வகுடித் தமிழர்களுக்கு காலத்தால் கிடைத்த ஒரு பெரிய சக்தியாகும். அதன் முன்னணித் தலைவர்களிலே சிலரோடு எனக்கு நெருக்கமான பழக்கமுண்டு அதன் தலைவர்களில் ஒருவரான காலஞ்சென்ற திரு வன்னியசிங்கம் என்னைப் பெரிதும் மதிப்பவர். அவரது உழைப்புக்காகவும் தியாக உணர்வுக்காகவும் அவர் பால் நான் மிகுந்த மதிப்பு [illegible]கொண்டிருந்தேன் அவர் சென்னைக்கு வந்திருந்த ஒரு சமயத்திலே இங்குள்ள அரசியல் தலைவர்களிடமும் பத்திரிகையாசிரியர்களிடமும் நானே அ[illegible] நேரில் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தேன். அதிலே அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி.

எல்லா சாதியினரும, எல்லா மொழியினரும் எல்லா மதத்தினரும் இடம் பெறுவது இயற்கை, இடம் பெறவும் வேண்டும். ஆனல் இலங்கை தமிழரசு கட்சியோ அங்குள்ள தமிழ் இனத்தவரின் பொதுப் பிரச்னைகளுக்காக தெளிவாகச் சொல்வதானல் தேசியப் பிரச்னைகளுக்காகப் பாடு படுவதற்கென்றேபிறந்தது. அந்தப் பிரச்னைகள் இன்றில்லாவிட்டாலும் என்றேனும் ஒரு நாள் தீர்க்கப்பட்டேயாக வேண்டும் அவை தீர்க்கப்படும்வரை இலங்கைத் தமிழினத்தின் தேசிய அமைப்பாக தமிழரசுக் கட்சி இயங்கவேண்டும். அது காரணமாக அந்தக் கட்சியிலே இலங்கையில் பெரும்பான்மையினராக வாழும் சிங்களவர்களிலே எவரும் சேரமாட்டார்கள், சேர்த்துக்கொள்வதும் சாத்தியமில்லை.

இலங்கைப் பூர்வகுடித் தமிழரிடையே ஒன்றுக்கு மேற்பட்டகட்சி இருப்பதை நான் அறிவேன். அது துரதிருஷ்ட வசமானதுதான். ஒருமொழி பேசும் இனத்தவரிடையே ஒரே அரசியல் கட்சிதான் இயங்கவேண்டுமென்று சொல்வதற்[illegible]லை. ஒன்றுக்கு மேற்பட்ட[illegible]ட்சிகள் இயங்கமுடியும். இந்தியத் தமிழகத்திலே நிலைமை அதுதான். ஆனல் இலங்கைத் தமிழர் நிலை வேறு. [illegible] இலங்[illegible]யின் ஜனத்தொகையில் பெரும்பான்மையினராகவும் ஆளும் சாதியினராகவும் உள்ள சிங் [illegible]

கள் ஆதலால், அவர்களிடையே சாதிப் பாகுபாடு இருக்கவில்லை. அவர்களுக்குள்ள இன்னெரு அதிருஷ்டம் என்னவென்றல், மதம் வேறு இனம் வேறு என்று இல்லாமல். இரண்டும் கலந்தே இருக்கின்றன. சிங்களவர்கள், என்போரெல்லாம் பௌத்தர்கள். பௌத்தர்கள் என்போரெல்லாம் சிங்களவர்கள். இதனல் சதியால் பிளவு படாதது மட்டுமன்றி மதத்தாலும் அவர்களி



டையே பிளவு தோன்ற வழியில்லை. ஒன்று பட்ட ஒரே இனத்தவராக அவர்கள் தமிழர்கள்மீது செல்வாக்கு செலுத்துகிறர்கள். தமிழர்களோ சாதிகளாலும் மதங்களாலும் பல கூறுகளாகப் பிரிந்து கிடக்கிறர்கள். அந்தப் பிரிவினைகளிடையே பரஸ்பரம் பகை உணர்ச்சியும் நிலவுகின்றது. போதாக்குறைக்கு கட்சிப் பூசல் வேறு.

இலங்கை சிங்களவர்களிடையேயும் கட்சிப்பூசல்கள் உண்டு. ஆனல் இலங்கை சிங்களவர்களின் தேசிய [illegible]

## ஐயாறன் எழுதுவது

ம பொ. சி. கொழும்பு விவேகானந்த சபையிலே பெரியதோர் பொதுக்கூட்டத்தில் பேசியபோது, ஒரு லட்சப் பிரபுவின் புதுச் செருப்பு தொலைந்து போயிற்று. மண்டபத்தின் முன் செருப்பைக் கழற்றி வைத்துவிட்டு மேடைமீது சென்று பேச்சைக்கேட்டுவிட்டுத் திரும்பி வந்து பார்க்கையில், அவர் செருப்பைக்காணேம். வெகு நேரம் தேடிக் கொண்டே இருந்தார். இவ்வித கூட்டங்களிலும், கோவில்களிலும், கல்யாணங்களிலும் புதுச்செருப்புகளைத் திருடுவதற்கென்றே சிலர் திட்டம் போட்டு வேலைசெய்வதாகத் தெரிகிறது.

பல தடவைகளில் என் செருப்புகளும் 'அபேஸ்' ஆகியுள்ளன. அந்த அனுபவத்தின் பிறகு வெறுங்காலுடனே கூட்டங்களுக்கும் கோவில்களுக்கும் செல்வது, அல்லது தேய்ந்து போன பழைய செருப்பை போட்டுக்கொள்வது, அப்படிச்சென்றல் யார் அதைத் திருடப் போகிறர்கள்?

ஆனல் நேற்றுக் கிடைத்த 'ஆனந்த விகடனில்' ஓர் அன்பர் இதற்குப்புதியதோர் நல்ல யோசனை கூறியிருக்கிறர். 'செருப்பில் ஒன்றை ஒரு மூலையிலும், இன்னென்றை மற்றொரு மூலையிலும் விட்டு விடுங்கள். தவறிப் போட்டுக் கொண்டு போகிறவர்களானலும் சரி, திருடுபவர்களானலும்சரி, புதுச்செருப்பானலும் ஒற்றைச்செருப்பைத்தொடமாட்டார்கள்'' என்கிறர்!

திருச்சி மலைக்கோட்டை முதலிய முக்கிய கோவில்களின் வாசலிலே, செருப்பை பத்திரமாகப் பாதுகாத்துக் கொடுக்க, சிலர் சொற்ப கட்டணம் வாங்கி அவ்விதமே செய்கின்றனர். நிம்மதியாக செருப்பை நினைக்காமல் கடவுளை நினைத்துக் கும்பிடலாம். ஓர் ஏழையும் பிழைக்கலாம் எல்லா இடங்களிலும் இப்படியான வசதி கிடைக்க முடியுமா?

0 0 0

தமிழகத்திலுள்ள வைதீஸ்வரன் கோயிலில், வருகிற ஜூலை மாதம் 2-ம் திகதி மகா கும்பாபிஷேகம் நடைபெறுகிறது தருமை ஆதீனத்தார் அனுப்பிய கும்பாபிஷேகப் பத்திரிகை நேற்று தபாலில் கிடைத்தது. 20 பக்கங்களுடன் கூடியபுத்தக வடிவமாக உள்ள இப்பத்திரிகையில் கோவிலைப் பற்றிய விபரங்களும், படங்

இரு வேளைகளிலும், ஆசாரிய விசேஷ சந்தியானுஷ்டானம்'' என்றுள்ளதைப் பார்த்துவிட்டு, இங்கெல்லாம் மாலையில் மட்டும் தான் இப்படிச்செய்வது வழக்கமென்றர். உரு வேற திருவேறு மென்பார்கள்

மொத்தம் 47 குண்டங்களாம். ஸ்ரீ வைத்திய நாதஸ்வாமிக்கு 9, ஸ்ரீ முத்துகுமாரஸ்வாமிக்கு 9, ஸ்ரீ தையல்நாயகி எனும் பாலாம்பிகைக்கு 9, ஸ்ரீ கற்பக விநாயகர் 5, ஸ்ரீ ஆறுமுககுமாரஸ்வாமி 5, அங்காரகன் முதலிய பரிவார மூர்த்திகளுக்கு 10. ஆக 47 யாக குண்டங்களென்று மந்திரம், விசேஷ மந்திரம், மூர்த்தி, சமித்து, தான்யம், பயன் முதலிய பல பல விவரங்களையும் வெளியிட்டிருக்கிறர்கள்.

கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள் இதெல்லாம் வீண் என்று கருதுவார்கள். ஆனல் இதற்காகும் செலவுகள் எல்லாம் ஏழைகளுக்குத் தான் சேரும். இங்கு கும்பாபிஷேகம் நடந்து 20 வருடங்களாகின்றனவாம். அக்கோயில் முறைகளைப் பார்த்தே வண்ணை நகர் ஸ்ரீ வைதீஸ்வரன் கோயிலிலும் பூசை திருவிழா எல்லாம் நடப்பதாகக் கூறுவர்.

இந்த மகா கும்பாபிஷேகத்துக்குச் செல்ல, யாழ்ப்பாணத்தில் பலருக்கும் ஆவல். ஆனல்...

0 0 0

''பேராயிரம் பரவி வானேரேத்தும் பெம்மானைப் பிரிவிலா அடியார்க்கென்றும், வாராத செல்வம் வருவிப்பானை மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித், தீராநோய் தீர்த்தருள வல்லான் தன்னைத் திரிபுரங்கள் தீயெழதிண் சிலைக்கொண்ட, போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றுதே ஆற்றநாள் போக்கினேனே.''

—அப்பர் அடிகள்

## நாவலர் சிலை கோப்பாய் வரும்

கோப்பாய், சனி

ஜூன் மாதப் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் நாவலர் உருவச் சிலை கோப்பாய்க்கும் ஊர்வலமாக எடுத்துவரப்படவுள்ளது.

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றம், வலி. கிழக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனப்பான்மையுடைய சமூக விரோத சக்திகளுக்கும் நல்ல வாய்ப்பளிப்பதாக அமைந்து விடுகின்றன. 'சன்' பத்திரிகை மட்டுமல்லாது, அதன் சகோதரப் பத்திரிகைகளான சுயாதீனப் பத்திரிகா சமாஜத்தின் இதர ஆங்கில, சிங்களப் பத்திரிகைகளும் மட்டுமல்லாது தேசியப் பத்திரிகைகள் எனத் தம்மைத்தான் கூறிக்கொள்ளும் 'டெயிலி நியூஸ்' போன்றசக்திவாய்ந்த பத்திரிகைகளும் என்ன காரணத்துக்காகவோ இதே வழிகளைப் பின்பற்றுகின்றன. இதனால் அந்தப்பத்திரிகைகளுக்கும் வேறு சிலருக்கும் சில இலாபங்கள் கிடைக்கலாம். ஆனால் நாட்டுக்கும் நாட்டுமக்களுக்கும் எந்தவிதமான நன்மையும் கிடைப்பதற்கில்லை. அரசியல் ஆதிக்கப்போட்டியிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும் பத்திரிகைகளும் இன்று மறந்துவிட்டதாகவே தோன்றுகிறது. இன, மத பூசல்களை மீண்டும் கிளப்பிவிடுவதற்கு சில சக்திகள் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாகவே தென்படுகிறது.

பத்திரிகைகளின் சக்தியை நன்குணர்ந்துள்ளவர் நமது பிரதமர். தேசிய ஐக்கியத்திலும் அவருக்கு ஆர்வமும் நம்பிக்கையும் அதிகம். பத்திரிகை ஆசிரியர்களையும் அரசியல் தலைவர்களையும் அவர் அழைத்து மலேஷியா நிலைமையைப் படிப்பினையாக எடுத்துக் காட்டி இங்கு இன, மத துவேஷப் பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க முயற்சி செய்தால் அது ஓரளவாவது பயன் தராமல் போகாது.

## கொலைகள்

நடந்துமுடிந்த ஏப்ரல மாதத்தில் மட்டும் நமது நாட்டில் 85 கொலைகள் நிகழ்ந்திருப்பதாகவும் இவ்வருடத்தில் முதல் நான்கு மாதத்திலும் 283 கொலைகள் நடந்துள்ளதாகவும் இந்தத் தொகை கடந்த வருடத்திலும் பார்க்க அதிகமென்றும் பொலிஸ் தலைமைக் காரியாலயம் வெளியிட்ட தகவல் ஒன்று தெரிவிக்கிறது. 'தம்மதுவீபம்' என்று பெருமையுடன் கூறிக்கொள்ளும் நமது நாட்டில் 'கொலைகளும் மற்றும் குற்றச் செயல்களும் அதிகரித்து வருவதையிட்டு இந்த நாட்டிலுள்ள எவரும் நிச்சயம் மகிழ்ச்சியடைய முடியாது.

வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு உயர்வு ஆகியவைகளும்மக்களின் கீழ்த்தர உணர்ச்சிகளைத் தூண்டிவிடும் திரைப் படங்கள், பத்திரிகைகள் ஆகியவைகளுமே இதற்குப் பெரும்பாலும் காரணம் என்று கூறப்படுவதில் நியாயமில்லையென்று சொல்லமுடியாது. ஆனாலும் மதத்துக்கும் மதவழிபாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் நமது நாட்டில் கொலை, மற்றும் குற்றச்செயல்கள் அதிகரித்துவருவதென்றால் அது கவலையளிப்பது மட்டுமல்ல, நமது சமூகத்திலுள்ள குறைகள் என்னவென்பதை ஆராய்ந்து திருத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் உணர்த்துவதாகும். சமய அறிவு மட்டும் போதாது சமய அனுஷ்டானம் முக்கியமென்பதையே இச் சம்பவங்கள் உணர்த்துகின்றன.

---

# புங்குடுதீவில் தண்ணீரின்றி மாணவர்கஷ்டம்

புங்குடுதீவு, ஞாயிறு

புங்குடுதீவில்குடிதண்ணீர் கிடையாமையால் மக்கள் கஷ்டப்படுவதையும் இங்குள்ள 15 பாடசாலைகளிலும் கல்விபயிலும் மாணவர்களும் குடிப்பதற்குத் தண்ணீரின்றிக் கஷ்டமடைவதையும் இங்குள்ள கிணறுகளில் உள்ள உப்பு நீரைக் குடிப்பதால் அநேகபிள்ளைகளுக்கு நோய் உண்டாகிவருவதையும் சுட்டிக்காட்டி சமூகசேவைமந்திரி, சமூகசேவைப்பகுதி அதிபதி, யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் ஆகியோருக்கு புங்குடுதீவு கல்வி வளர்ச்சிக் கழகம் எடுத்துக்காட்டி உடனடியாகப் புங்குடுதீவுக்கு குடிதண்ணீர் வழங்கும்படி கேட்டுள்ளது.

இப்பத்திரிகை, ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1969-ம்ஆண்டு மேமாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

— ம. பொ. சிவஞான கிராமணியார் —

என் மனத்தை ஒதுக்கிக் கொண்டுவிட நான் விரும்புகிறேன் இல்லை. அப்படி ஒதுக்கிக் கொள்வது தமிழ் இனத்துக்கு நான் ஆற்ற வேண்டிய கடமைகளிலிருந்து ஒதுங்கிக் கொள்வதாகும். அந்தத் தவறை என் வாழ்நாளிலேயே இதுவரை நான் செய்யவில்லை. இனியும்செய்யப்போவதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்பு இலங்கைப் பூர்வகுடித் தமிழர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடிய போது எனது தமிழரசுக் கழகம் முழு அளவில் ஆதரவளித்திருக்கிறது. இலங்கை ஆட்சி அங்குள்ள தமிழர்களின் உரிமைப்போரை ஒடுக்க அடக்குமுறைகளைக் கையாண்ட போது அந்தக்கொடுமையை எதிர்த்து சென்னையிலுள்ள இலங்கைத் தூதுவர் அலுவலகத்தின் எதிரே ஆர்பாட்டம் நடத்தினர் தமிழரசுக் கழகத் தொண்டர்கள்.

அ போது இலங்கைப் பிரதமராக இருந்த திருமதி பண்டாரநாயகா இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகநடத்தும் அடக்குமுறை கொடுமைகளை நேரில் கண்டறிய என்னை அந்த நாட்டிற்குள் அனுமதிக்குமாறு கடிதம் எழுதினேன். இலங்கைப் பிரதமர் சிறிதுகாலம் கடத்திவிட்டு பின்னர் எனக்கு விசா வழங்குமாறு சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவருக்கு எழுதினர்.

இந்தியத் தமிழகத்திலே நூற்றுக் கண் கானகூட்டங்களிலே இலங்கைத் தமிழர் பிரச்னைபற்றி பேசி அவர்களுடைய பிரச்சார பீரங்கியாக விளங்கி வந்திருக்கிறேன்.

இலங்கைப் பூர்வகுடி தமிழர்களுக்காக மட்டுமின்றி அங்குள்ள இந்திய வம்சாவழியினருக்காகவும்என்னால் இயன்ற தொண்டை சமீப ஆண்டுகளில் நான் செய்து வந்திருக்கிறேன். இவ்வளவையும் இந்தியாவிலிருந்து கொண்டுதான் செய்தேன். இது எனது உரிமைத் திருநாடு. இலங்கை அப்படி அல்ல. அது எனது உறவுக்குரிய நாடுதான். அதனால் அந்த நாட்டில் இருந்து கொண்டு அரசியல் சர்ச்சைகளில் ஈடுபடுவதை நான் திட்டமிட்டுத் தவிர்த்து வந்திருக்கிறேன். ஆனால் இலங்கை சென்றஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அங்குள்ள பூர்வகுடித் தமிழர்சள் இந்திய வம்சாவளித் தமிழர் வாழும் தோட்டப் பிரதேசங்களிலேயும் மிகுந்த சிரமத்துடன் சுற்றுலா செய்திருக்கிறேன்.

இலங்கைத் தமிழர் நிலையை நன்கு ஆராய்ந்து அவர்கள்பால் மிகுந்த அனுதாபம் கொண்டு - அறிந்து சமயத்திலே இங்குள்ள அரசியல் தலைவர்களிடமும் பத்திரிபர்களிடமும் நானே அவரை நேரில் அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தேன். அதிலே அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி. அவர் சென்னையிலிருந்த சமயத்திலே அவர் என்னைச் சந்தித்த நேரத்தில் எல்லாம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கை பற்றி விரிவாக விவாதித்திருக்கிறோம் அந்தக்கொள்கையிலே எனக்குள்ள ஐயப்பாடுகளை ஒளிவு மறைவின்றி எடுத்துரைத்து அவரிடம் விளக்கம்பெற்றிருக்கிறேன். இந்த அனுதாபத்தையெல்லாம் கொண்டு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அழைப்பை ஏற்று அந்தக் கட்சியின் மாநாட்டில் கலந்து கொள்ள இசைவு தெரிவித்தேன். இலங்கை அரசிடம் எனக்காகவிசாவைப்பெறும் வேலையையும் தமிழரசுக் கட்சித் தலைவர்களிடமே விட்டுவிட்டேன். அவர்கள் சிரமமேதுமின்றி எனக்காக விசா பெற்றதாக அறிந்தேன். நான் இலங்கையிலிருந்த சமயத்திலே நீங்கள் அரசியல் சர்ச்சையிலே ஈடுபடமாட்டீர்கள் என்று இலங்கை அரசுக்கு உறுதிமொழி கொடுத்துத்தான் நாங்கள் உங்களுக்காக விசாப் பெற்றோம் என்பதாக டாக்டர் நாகநாதன் எம்.பி. அவர்கள் என்னிடம் தொலைபேசியில் பேசும்போது கூறினார். அவர்கள் செய்ததில் தவறில்லை அதுதான் சர்வதேச நெறி.

நான் கலந்து கொண்ட மாநாட்டிலேதான் இலங்கையில் ஆளுங்கட்சியோடு தனக்குள்ள உறவைத் துண்டித்துக் கொண்டு எதிர்க் கட்சியாக இயங்குவதென தமிழரசுக் கட்சி முடிவெடுத்தது, ஆனால் அந்த முடிவு மேற்கொள்ளப்பட்ட நேரத்திலே நான் மாநாட்டுப் பந்தலில் இருக்கவில்லை. ஆயினும் அந்த முடிவு சரியானது என்பதுதான் என் கருத்து.

### தமிழரசுகழகமும் தமிழரசுக் கட்சியும்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலை இந்தியத் தமிழகத்திலுள்ள எனது தமிழரசுக் கழகத்தின் நிலை போன்றதுத்தான். அதாவது இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளிலே ஒரு கட்சியாக அந்த நாட்டின் தமிழரசுக் கட்சியை நான் கருதவில்லை. அரசியல் கட்சி என்றால் அதிலே அந்தக்கட்சி இயங்கும் நாட்டில் உள்ள ...கள் இயங்கமுடியும். இந்தியத் தமிழகத்திலே நிலைமை அதுதான். ஆனால் இலங்கைத் தமிழர் நிலைவேறு. அவர்கள் இலங்கையின் ஜனத்தொகையில் பெரும்பான்மையினராகவும் ஆளும் சாதியினராகவும் உள்ள, சிங்களஇனத்தவரின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கிறார்கள். அதனால் இலங்கைத் தமிழரிடையே பல கட்சிகள் இயங்குவது அவர்களைப் பிளவுபடுத்தி அவர்களுடைய எதிர்காலத்தை இருட்டாக்கிவிடும்,

இந்த உண்மையை மனதில்கொண்டு இலங்கை தமிழரசுக்கட்சி மகாநாட்டிலும் சரி தமிழரசுக் கட்சியோடு சேர்ந்தும் சேராமலும் விரும்பியும் விரும்பாமலும் உள்ள மக்கள் அடங்கிய கொழும்பு நகரக் கூட்டங்களிலே ஒற்றுமையை அதிகம் வலியுறுத்திப் பேசினேன்.

### ஜி. ஜி. யிடமும் வற்புறுத்தினேன்

இலங்கைத் தமிழரிடையே அரசியல் கட்சிகள் ஒன்றுக்கு மேற்பட்டிருப்பினும் அந்தக்கட்சிகளிடையே - தமிழர் சம்பந்தப்பட்டபொதுப் பிரச்னைகளிலேயும் ஒருமைப்பாடு இருக்கவேண்டும் என்பது என் விருப்பம: இந்த விருப்பத்தை கொஞ்சம் நாசுக்காக தமிழரசுக்கட் மேடையிலும் எடுத்துரைத்தேன். இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களிடம் உரையாட நேர்ந்த போதும் அவரிடமும் வற்புறுத்தினேன். எனது இந்த முயற்சி பலனளித்திருக்குமென்று எனக்குத் தோன்றவில்லை ஆயினும் எனதுகடமையைச் செய்ததற்காக நான் ஆறுதலடைகிறேன்.

தமிழ் இனத்தவரிடையே மற்றெருவிதமான ஒற்றுமையையும் இலங்கையில் நான் பேசிய கூட்டங்களில் மிகவும் அழுத்தந்திருத்தமாகக்குறிப்பிட்டேன். தமிழரிடையே சாதிப் பிரிவுகள் இருப்பதால், அந்தசாதிகளிடையே ஏற்றத்தாழ்வும் இருந்து வருவதால், அவர்களிடையே இன உணர்ச்சி அழுத்தம் பெறவில்லை. இன உணர்ச்சியைவிட சாதி உணர்ச்சியே மேலோங்கி நிற்கின்றது. ஒரு மொழி பேசும் இனத்தவரிலே ஒரு சாராரிடையே உயர்வு மனப்பான்மை இருக்குமானால் அவர்கள்ஒன்று படுவது எங்ஙனம்?

இலங்கை வாழ் சிங்களவர்கள் அநேகமாக பௌத்தர் ... உணர்ச்சியும் நிலவுகின்றது. போதாக்குறைக்கு கட்சிப் பூசல் வேறு.

இலங்கை சிங்களவர்களிடையேயும் கட்சிப்பூசல்கள் உண்டு. ஆனால் இலங்கை சிங்களவர்களின் தேசிய நலன்களைப் பொறுத்தவரை கட்சிப் பூசல் தலைகாட்டுவதில்லை. அனைத்துக்கட்சி சிங்களவர்களும் ஒன்றுபட்டு விடுகிறார்கள். ஆம். செஞ்சீனத்தை ஆதரிக்கும் கம்யூனிஸ்டு சிங்களவர்கள் கூட இதற்கு விலக்கல்லவாம்.

### சாதி சமய வேறுபாடு நீங்க வேண்டும்

இதனாற்றான், சாதிகளை மறந்து, சமய வேற்றுமைகளை மறந்து, இன உணர்ச்சியில் ஒன்றுபடுமாறு இலங்கைத் தமிழர்களை வேண்டிக் கொண்டேன். என்னுடைய வேண்டுதலை நிறைவேற்றுவதால் விளையக்கூடிய நன்மைகளை இலங்கைத் தமிழர்களிலே ஒவ்வொருவரும் அறிவார்கள். ஆனால் சாதி உயர்வு-தாழ்வு மனப்பான்மையைக் கைவிடுவது அவ்வளவு சுலபமானதாக இருக்கவில்லை. தீண்டாமை உணர்வைக்கூட இலங்கை பூர்வ குடித் தமிழர்களிலே ஒரு சாராரால் இன்னமும் விடமுடியவில்லை. கட்டுப்பாடுடைய இராணுவத்தினரைப் போன்றவர்கள் வீர உணர்ச்சியுடைய தாழ்த்தப்பட்ட மக்கள். தீண்டாமை அடியோடு ஒழிக்கப்படுமானால் இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போரிலே முன்னணி இராணுவத்தினராக விளங்குவார்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். இந்த உண்மையை திரு. சுந்தரலிங்கம் எம். பி.போன்றவை தீகச் சைவர்கள் இன்னமும உணராதது தமிழினத்தின் கெட்டகாலமேயாகும். அவரையும் வேண்டிக் கொள்ள விரும்பினேன். ஆனால் நான் சென்றபோது அவர் யாழ்ப்பாணத்தில் இல்லை என்று எனக்குச் சொல்லப்பட்டது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி தீண்டாமையை ஒழிப்பதிலே மிகுந்த தீவிரம் காட்ட வேண்டும். அதனால் உயர்வு மனப்பான்மை கொண்டவர்களிலே சிலர் கட்சியை வெறுக்க நேர்ந்தாலும்சரி, இராணுவத்தினரைப் போன்ற தாழ்த்தப்பட்ட மக்களின் ஒத்துழைப்பு தமிழரசுக்கட்சிக்குக் கிடைக்கும். அது கிடைத்தாலும்சரி, கிடைக்காவிட்டாலும்சரி, தமிழினத்தை ஒன்றுபடுத்துவதற்காக வேனும் தமிழரசுக்கட்சி அதிக அளவில் தீவிரம் காட்ட வேண்டும்.

தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்திற்காகவே யாழ்ப்பாண மாநிலத்தில் தனியாக ஒரு முறை சுற்றுலா செய்ய வேண்டுமென்ற விருப்பம் எனக்குண்டு. காலம் கைகொடுத்தால் அந்த விருப்பம் நிறைவேறும்.

இலங்கை ஐக்கியதேசியக் கட்சியின் உறவைத் துண்டித்துக் கொண்ட பின்னர் அதன் பொறுப்பு அதிகமாகிவிட்டது. எதிர்க்கட்சிக்குரிய இடத்தில் தான் இருக்கப் போவதாக தமிழரசுக்கட்சி அறிவித்துள்ளது. இதுபற்றி நான் இலங்கையிலிருந்தபோது கட்சித்தலைவர்களிடம் கலந்து உரையாடி என் கருத்தை வெளியிட விரும்பினேன். அவர்கள் மாநாட்டு வேலைகளில் மூழ்கியிருந்ததால் அதற்கான வாய்ப்புக் கிடைக்கவில்லை

இலங்கைப் பாராளுமன்றத்திலே, தமிழரசுக்கட்சி எதிர்க்கட்சிகளிலே ஒன்றாக இனி மதிக்கப்படுவது இயற்கை. அதுவெறும் பார்லிமென்டரி சம்பிரதாயப்படிதான். உண்மையாக அதன் நிலை எதிர்க்கட்சியினின்றும் வேறுபட்டதாகும்.

(தொடரும்)

...னத்தார் அனுப்பிய கும்பாபிஷேகப் பத்திரிகை நேற்று தபாலில் கிடைத்தது. 20 பக்கங்களுடன் கூடியபுத்தக வடிவமாக உள்ள இப்பத்திரிகையில் கோவிலைப் பற்றிய விபரங்களும், படங்களும், நிகழ்ச்சி நிரல்களும் அடங்கியுள்ளன. இதை ஓர் பூசகர் பார்த்துவிட்டு வியந்தார் காலை, மாலை

## நூல்கள் தேவை

பேராதனை இலங்கைப் பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கம் பின்வரும் வேண்டுகோளை விடுத்துள்ளது:-

எமது சங்கம் பேராதனைப் பல்கலைக்கழக முருகன் ஆலயத்தில் ஒரு நூல் நிலையம் அமைக்க உத்தேசித்துள்ளது. இதற்குத் தேவையான நூல்களைப் பொது மக்களிடமிருந்து நன்கொடையாகக் கோருவதென முடிவு செய்துள்ளோம். இந்து சமயம் கலாசாரம், முத்தமிழ், தமிழன் வாழ்வு பற்றிய நூல்கள் எம்மொழியிலிருப்பினும் வரவேற்கப்படும்.

இந்நற்பணிக்கு உதவி புரிய விரும்புவோர், தங்கள் காணிக்கையை, பெருந்தலைவர் இந்து மாணவர் சங்கம் குருந்து கொடல்ல பல்கலைக்கழக பூங்கா பேராதனை என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்கலாம்.

---

யாழ்ப்பாணத்தில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் நாவலர் உருவச் சிலை கோப்பாய்க்கும் ஊர்வலமாக எடுத்துவரப்படவுள்ளது.

கோப்பாய் திருவருள் தவநெறி மன்றம், வலி. கிழக்கு காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை ஆகியோரது கோரிக்கைக்கிணங்க நாவலர் சிலையை கோப்பாய்க்கும் கொண்டுவர யாழ். நாவலர் சபைத்தலைவர் திரு. ரி. முருகேசம்பிள்ளை சம்மதித்துள்ளாரென தெரியவருகிறது.

கோப்பாய்ப் பகுதிக்குள் நாவலர் சிலைக்கான வரவேற்பு வைபவங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் தவநெறி மன்றமும், காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளையும் மேற்கொண்டுள்ளனர்.

---

## இருதாரக் குற்றச்சாட்டு

### பெண்மீது வழக்கு

யாழ்ப்பாணம், திங்கள்

முதலாம்தாரக் கணவன் இருக்கையில் வேறொரு வாலிபனை இரண்டாம்தாரமாகத் திருமணம் செய்தாராம் இளம் பெண்ணொருவர். இது சம்பந்தமான வழக்கொன்றை யாழ்ப்பாணம் விசேஷ குற்றத்தடுப்புப் பொலிஸ் பகுதியினர் மல்லாகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

சண்டிலிப்பாயைச் சேர்ந்த பிரகாச வதனத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இவ்வழக்கு மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. ஆனந்தகுமாரசாமி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

வழக்கு விசாரணை செய்யப்பட்டபோது குறிப்பிட்ட இரண்டாவது கணவரான வாலிபருக்கு எந்த பயமுறுத்தல் கடிதங்கள் பற்றி நீதிமன்றத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பொலிஸ் தரப்புச் சாட்சியான கோவில் பூசகர் ஒருவர் நீதிமன்றத்திற்கு வராததால் அவருக்கு வாரன்ட் பிறப்பிக்கப்பட்டபின் வழக்கு மேல்விசாரணை அடுத்தவாதம் 12ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

## அனலைதீவு கி.ச தேர்தல்

அனலைதீவு, ஞாயிறு

அனலைதீவு கி.ச தேர்தல் வருகிற மாதம் 17ம் திகதி நடைபெறவிடுக்கிறது. தேர்தல் பிரசாரங்கள் இங்கு மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org